## இரண்டாம் பகுதி

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | | பக்கம் |
|---|---|---|
| கணக்குகளும், வங்கித் தொழிற்பாடுகளும் | ... | (i) |
| நாணய வெளியீடு | ... | (vi) |
| வங்கித்தொழில் அபிவிருத்தி | ... | (vii) |
| வங்கி மேற்பார்வை | ... | (viii) |
| அபிவிருத்தி நிதி | ... | (viii) |
| கிராமியக் கொடுகடன் | ... | (xiv) |
| அளவீடுகள் | ... | (xviii) |
| கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | ... | (xix) |
| வெளியீடுகள் | ... | (xx) |
| பயிற்சி | ... | (xx) |
| ஆய்வரங்குகள் | ... | (xxi) |
| வாடிக்கையாளர் பணி | ... | (xxi) |
| சிறப்புப் பணிக்குழு | ... | (xxi) |
| பிரதேச அலுவலகம் - மாத்தறை | ... | (xxii) |
| பிரதேச அலுவலகம் - அநுராதபுரம் | ... | (xxvi) |
| செலாவணிக் கட்டுப்பாடு | ... | (xxx) |
| பொதுப்படுகடன் | ... | (xxxii) |
| ஊழியர் சேமநிதியம் | ... | (xxxiii) |
| ஆளணி | ... | (xxxv) |

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித் தொழிற்பாடுகளும்

1983 திசெம்பர் 31இல் உள்ளவாறான மத்திய வங்கியின் ஐந்தொகையும் 1983 திசெம்பர் 31இல் முடிவடைந்த இலாப நட்டக் கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன.

1983 முடிவில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் ரூ. 330,969 இலட்சமாகவிருந்து, கடந்த ஆண்டின் மட்டத்திற்கு மேலாக 10 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. சொத்துக்களிலான அதிகரிப்புக்கு "பன்னாட்டு ஒதுக்குகளி"னதும் (2 சதவீதம்) உள்நாட்டுச் சொத்துக்களினதும் (15 சதவீதம்) அதிகரிப்புக்களே காரணமாகும். இதே காலத்தில் வங்கியின் பொறுப்புக்கள் அரச வைப்புக்கள், அரச முகவர்கள், வர்த்தக வங்கிகள் ஆகியவற்றின் அதிகரிப்பின் விளைவாக ரூ. 32 883 இலட்சத்திலிருந்து ரூ. 52,263 இலட்சத்துக்கும், சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 68,565 இலட்சத்திலிருந்து ரூ. 81,735 இலட்சத்திற்கும் உயர்வடைந்தன.

வங்கியின் 1983ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூ. 29,548 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினுடையதைவிட 8 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. செலவுக்கான படிகளும், ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கங்களும், பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கங்களும் செய்யப்பட்ட பின்னர் மத்திய வங்கியின் தேறிய இலாபம் ரூ. 16,510 இலட்சமாகக் காணப்பட்டது ரூ. 10 இலட்சம் கொண்ட தொகை நாணயச் சட்ட விதியின் பிரிவு 39 (ஆ) வின் நியதிகளுக்கிணங்க வங்கியின் மிகைக்கு மாற்றப்பட்டது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ)யின் நியதிகளின்படி அரசிற்குச் செலுத்தப்பட்ட ரூ. 16,500 இலட்சம் கொண்ட நிலுவை மத்திய வங்கிக்கான அரசின் வெளிநிற்கும் கடன்பாடுகளுக்கான ஒரு பகுதித் தீர்ப்பனவாகக் கருதப்படும்.

## வெளிநாட்டுச் செலாவணி

மத்திய வங்கியானது தொடர்ந்தும் இலங்கை ரூபாவுக்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலர்களின் உடன் வாங்கல் விற்றல் வீதங்களை ஒவ்வொரு வேலை நாள் காலையிலும் அறிவித்ததுடன், பி. ப. 2.30 மணிவரை வர்த்தக வங்கிகளுடன் இந்த வீதங்களைச் செயல்முறைப்படுத்தியது. மத்திய வங்கி ரூபாய்களுக்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலர்களைக் கொள்வனவு செய்வதன் பொருட்டு இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளுடனான அதன் முன் கொடுக்கல் வாங்கல்களை ஆகக் கூடிய 6 மாத காலப் பகுதிக்கு தொடர்ந்தும் கட்டுப்படுத்தியது. இவ்வாண்டில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உடன்படிக்கையின் கீழ் நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மாற்றமின்றியிருந்தன. ஆறு மாதங்கள்வரையிலான உடன் முன் மாற்றல்களுக்கான விற்பனைகள், கொள்வனவுகள் இரண்டும் தொடர்ந்திருந்தன. தொடர்புபட்ட நாணயங்களில் வங்காளதேச தக்கா, பர்மியக் கியத், இந்திய ரூபாய், ஈரானிய ரியால்கள், நேபாள ரூபாய், பாகித்தான் ரூபாய் ஆகியன இருந்தன.

## ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

மீளாய்வின் கீழான காலப் பகுதியில் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய வசதியினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் எதிதொகையாகிய ரூ. 41,762 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 46,180 இலட்சங்களாக விளங்கியது. மீளாய்விற்குரிய காலப் பகுதிக்கான தேறிய வரவுகள் 1982இன் ரூ. 1,425 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 2,145 இலட்சங்களாக விளங்கின.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

## 1983 ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாளில்

### ஐந்தொகை — 1983ஆம் ஆண்டு

| 1982 திசெம்பர் 31 ரூபா | 1982 திசெம்பர் 31 ரூபா | பொறுப்புக்கள் | 1983 திசெம்பர் 31 ரூபா | 1983 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|---|---|
| | | **மூலதனக் கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 67,000,000 | 82,000,000 | மிகை ... | 68,000,000 | 83,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 6,594,611,997 | | தாள்கள் ... | 7,859,148,039 | |
| 261,870,269 | 6,856,482,266 | குத்திகள் ... | 314,397,956 | 8,173,545,995 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,025,896,298 | | அரசு ... | 1,758,189,021 | |
| 18,804,278 | | அரச முகவர் நிலையங்களும் அரச நிறுவனங்களும் ... | 54,845,058 | |
| 2,243,575,525 | | வர்த்தக வங்கிகள் ... | 3,413,245,644 | |
| 5,113,496,976 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 4,894,195,284 | |
| 406,865 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 122,074,500/- கொண்ட தொகையை நீக்கிய கட்டாயச் சேமிப்பு நிதி ... | 186,510 | |
| 561,158,942 | 8,963,338,884 | ஏனையவை ... | 599,684,518 | 10,720,346,035 |
| | 1,851,177,070 | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன் பாடுகள் ... | | 1,873,056,859 |
| | 775,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் ... | | 775,000,000 |
| | 110,000,000 | மூலதன உதவுதொகைக் கணக்கு ... | | 110,000,000 |
| | 11,528,747,416 | ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் ... | | 11,361,957,704 |
| | 30,166,745,636 | | | 33,096,906,593 |

### 1983 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற

| | ரூபா | | | ரூபா |
|---|---|---|---|---|
| | 1,221,389,163 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத்தளபாடங்களினதும் மீதான பெறுமானத்தேய்வையும், உள்ளடக்கும்) நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 1,303,766,732 |
| | | 1983 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம் | | |
| 1,450,140 | | நாணய சீராக்கக் கணக்கிற்கு-நாணய விதிச் சட்டத்தின் 39(அ) பிரிவின் நியதிகளின் கீழ் தீர்த்துக்கட்டிய நிலுவை. | 58,642 | |
| 1,000,000 | | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி தேறிய இலாபம் மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | 1,000,000 | |
| 1,500,000,000 | 1,502,450,140 | நாணய விதிச் சட்டத்தின் 38 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 1,650,000,000 | 1,651,058,642 |
| | 2,723,839,303 | | | 2,954,825,374 |

1983ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின். பிரிவு 154 (1) இற்கு அமையவும், 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42(1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரிமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன

அட்டவணை 2.1

## உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள்

### திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளபடி

| 1982 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1983 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 6,219,483,080 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும் | 6,003,952,062 | |
| 728,436,348 | | *வெளிநாட்டுப் பிணைகள் ... | 1,222,599,773 | |
| 148,029,819 | 7,095,949,247 | கையிருப்பிலிருக்கும் சிறப்பு எடுப்பனவு உரிமை ... | 20,437,101 | 7,246,988,936 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 2,140,337,811 | | அரசிற்கு ... | 2,794,461,262 | |
| 603,213,207 | | ஏனையவற்றிற்கு- நடுத்தர நீண்டகால ... | 623,491,947 | |
| 792,953,480 | | குறுங்கால ... | 2,321,122,015 | |
| 15,860,139,246 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 16,598,592,278 | |
| 110,000,000 | 19,506,643,744 | நிதி, ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் | 110,000,000 | 22,447,667,502 |
| | 3,564,152,645 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... | | 3,402,250,155 |
| | | *அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூபா 5,527,675/- முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூ. 57,450/- முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ. 2,933,697/- ஆகவும், ரூபா 34,340/- ஆகவும் இருந்தன.) | | |
| | 30,166,745,636 | | | 33,096,906,593 |

### ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| ரூபா | | ரூபா |
|---|---|---|
| 2,723,839,303 | வட்டி, ஏனையவை | 2,954,825,374 |
| 2,723,839,303 | | 2,954,825,374 |

**வர்ணசேன இராசபுத்திர**
ஆளுநர்

**யூ. ஏ. த. சில்வா**
முதன்மைக் கணக்காளர்

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2)இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு-7.
1984, எப்பிறல் 4

**டபிள்யூ. ஜீ. ஏபா**
கணக்காய்வாளர் நாயகம்

**இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்**

1964 இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதலை விரைவுபடுத்துவதற்காக அரசின் சார்பில் வங்கி இரண்டு திட்டங்களைத் தொடர்ந்தும் செயற்படுத்துகின்றது அவையாவன:

1. இந்தியாவுக்குத் திரும்பிச் செல்வோருக்கு ஒப்புதலளிக்கப்பட்ட தொகையில் 65 சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகை அல்லது அத்தகைய திரும்பிச் செல்வோருக்கு செலுத்தப்பட்ட அத்தொகையின் ஒரு பகுதி என்ற நியதியிலமைந்த உதவு தொகைத் திட்டம்.
2. வெகுமதிக் கொடுப்பனவான ரூ. 500 உம் இத்தொகையில் இத்தொழிலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு ஊக்குவிப்பாக கொடுக்கப்பட்ட 65 சத வீதமுமாகும். வங்கி இவ்விரு திட்டங்களையும் வர்த்தக வங்கிகளுக்கூடாகத் தொழிற்படுத்தியது.

**கடன்களும் முற்பணங்களும்**

அரச, அரச உத்தரவாதப் பிணைகளையும், வர்த்தக உற்பத்திக் கடன்களுடன் தொடர்பான சலுகைக் காலச் சான்றிதழ்களையும் வைத்து வர்த்தக வங்கிகளால் பெறப்பட்ட குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் (வங்கிவீதம்) 1983 மாச்சு 24 முதல் ஆண்டிற்கு 14 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 13 சதவீதமாக குறைக்கப்பட்டது. இலங்கையிலிருந்து ஏற்றுமதிகளுக்கான நிதியிடலின் பொருட்டு வங்கிகளுக்கு உதவும் நோக்குடன், வர்த்தக வங்கிகளுக்கு குறுந்தவணை, மீள்நிதியிடற் கடன்களுக்காக வழங்கப்பட்ட வட்டிவீதம் 1983 மாச்சு 24 முதல் ஆண்டொன்றிற்கு 12 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றிற்கு 11 சதவீதமாகக் குறைக்கப்பட்டதுடன் 1983 யூன் 1ஆம் திகதி முதல் ஆண்டொன்றுக்கு 10 சதவீதத்தால் மேலும் குறைக்கப்பட்டதுடன் வர்த்தக வங்கிகள் தத்தமது வாடிக்கையாளருக்கு மீள் நிதியிடலுக்காக வழங்கப்படும் முற்பணங்களுக்கான வட்டிவீதம் ஆண்டொன்றிற்கு 13 சதவீதத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும் என்னும் வரையறைக்குட்பட்டிருந்தது. 1983 மாச்சு 24இல் உள்ளவாறு நடுத்தர, நீண்ட தவணைக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களுக்கு பொருத்தமான வட்டிவீதங்கள் ஆண்டொன்றிற்கு 1 சதவீதத்தால் குறைக்கப்பட்டது. குறுங்கால வட்டிவீதங்களில் ஏற்பட்ட குறைப்புடன் மத்திய வங்கி குறுந்தவணை முற்பணங்களுக்கான தண்டவீதங்களையும் ஆண்டொன்றிற்கு 21 இலிருந்து 30 சதவீதம் என்ற எல்லைக்குட்பட குறைத்தது. 1983 மாச்சு 30 ஆம் நாளிலிருந்து ஆண்டொன்றிற்கு 20 சதவீதம் என்ற ஒரே வீதத்தினை ஏற்படுத்தியது. எனினும், தண்ட வீத கடன்பாடுகள் 1983 நவெம்பர் 23இல் நிறுத்தப்பட்டன.

இவ்வாண்டுக் காலத்தில் மத்திய வங்கியின் வர்த்தக வங்கிகளுக்கான வங்கி வீத கடன்வழங்கல்களும் ஏற்றுமதிகளுக்கான மீள் நிதியிடல் திட்டமும் தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருந்தன. அத்துடன் வங்கியானது 1983 மாச்சு 16 இல் துணை ஏற்றுமதிக் கொடுகடன் வசதி ஒன்றினை அறிமுகப்படுத்தியதன் மூலம் மரபுரீதியல்லாத பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களுக்கு சலுகை விலைகளில் நிதி வசதியளிப்பதற்கு வழியேற்பட்டது. இத்திட்டத்தின்கீழ் வர்த்தக வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கான முற்பணங்களின் கழிவின்மீது ஆண்டிற்கு 9.75 சதவீதத்தை அல்லது முற்பணத்தின் முழுப்பெறுமதியில் ஆண்டிற்கு 10.80 சதவீதத்தை மிஞ்

சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு ஆண்டொன்றிற்கு 7 சதவீதம் என்ற வீதத்தில் ஆகக்கூடியது 120 நாட்களைக் கொண்ட வாக்குறுதிச் சான்றிதழ்களைக் கழிவு செய்வதற்காக வர்த்தக வங்கிகளின் விண்ணப்பங்களை வங்கி ஏற்றுக் கொள்ளும்.

நெல், காய்கறிகள், ஏனைய குறிப்பிட்ட பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தி தொடர்பான கூட்டுறவு நிறுவனங்களின் அல்லது தனிப்பட்டவர்களின் சலுகைக் கால வாக்குறுதிச் சான்றிதழ்களை பிணைகளாகக் கொண்டு வர்த்தக வங்கிகளுக்கு மத்தியவங்கியால் வழங்கப்பட்ட முற்பணங்களின் வட்டிவீதம் தொடர்ந்தும் ஆண்டொன்றிற்கு 1.5 சதவீதமாகவிருந்தது. நெல் கொள்வனவையும், உள்ளூரில் பயிரிடப்பட்ட ஏனைய சில குறிப்பிட்ட பயிர்களினது கொள்வனவையும், களஞ்சியப்படுத்தலையும் நிதியீட்டுவதற்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கும் கமநலப் பணிநிலையங்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கும் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட முற்பணங்களுக்கெதிராக வர்த்தக வங்கிகளினால் சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்களை பிணையாக வைத்துப் பெறப்பட்ட வங்கி முற்பணங்களின்மீதான வட்டிவீதம் ஆண்டிற்கு 3 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது.

### நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியம்

*1983* ஆம் ஆண்டில் மத்திய வங்கி அதன், நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியத்தின்கீழ் மீள் நிதியிடல் திட்டத்தை தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. *1983* காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட மீள் நிதியிடல் கடன்களின் மொத்தம் ரூ. *1,561* இலட்சமாக விளங்கியது.

### வர்த்தக வங்கிக் கொடுகடன்

*1983* நவெம்பர் *1*ஆம் நாள் தொடக்கம் மத்திய வங்கி எல்லா வர்த்தக வங்கிகளுக்கும் விடுத்த பணிப்புரையில் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்த முற்பணங்களுக்கும் *1983* நவம்பர் *1*ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் வெளிநின்ற மொத்தத்தொகை,*1983*ஒற்ரோபர்*31*ஆம்நாளன்றுவழங்கப்பட்டிருந்த மொத்தத் தொகையையும் வெளிநின்ற தொகையையும் விஞ்சவில்லை என உறுதிப்படுத்தும்படியும், கொடுகடன்களை வழங்கும்போது துறைகளைக் கொடுகடன் ஒதுக்கிற்கான குறிப்பிட்டதுறைகளை முன்னுரிமைத்துறைகளாகக் கருதும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டன. *1983* திசெம்பர் *1* ஆம் நாளன்று இந்தப் பணிப்புரை புறக்கீடு செய்யப்பட்டது.

### ஒதுக்குத் தேவைகள்

*1983* திசெம்பர் *2*ஆம் நாள் முதல் மத்திய வங்கியின் ஒதுக்குத் தேவைகள் திருத்தியமைக்கப்பட்டன. கேள்வி வைப்புக்களின் மீதான நியதிச்சட்ட ஒதுக்கு விகிதம *14* சதவீதத்திலிருந்து *16* சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டவேளையில் தவணை சேமிப்பு வைப்புக்கள் மீதான விகிதம் *6* சதவீதத்திலிருந்து *8* சதவீதமாக உயர்த்தப்பட்டது.

அத்துடன் *1983* திசெம்பர் *16* ஆம் நாள் தொடக்கம் மேலதிகமாக, அத்தகைய வங்கிகளால் அனுமதியளிக்கப்பட்ட மேலதிகப் பற்றுக்களின் பயன்படுத்தப்படாத மொத்த நிலுவைகளில் *16* சத வீதத்தினை ஒதுக்குத் தேவையாகப் பேணுமாறு வர்த்தக வங்கிகள் பணிக்கப்பட்டன.

### திறைசேரி உண்டியல்கள்

திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி திறைசேரி உண்டியலில் அதன் கொடுக்கல் வாங்கல்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. வங்கி அதன் சொந்த முதலீட்டுப் பட்டியல்களிலிருந்து விற்பனை செய்வதுடன் வேறுபட்ட முதிர்ச்சித்தன்மை கொண்ட திறைசேரி உண்டியல்களையும் கொள்வனவு செய்கிறது. திறைசேரி உண்டியல்களின் மொத்த விற்பனைகளில் 1982இன் ரூ. 487,019 இலட்சத்திலிருந்து 1983இல் ரூ. 189,469 இலட்சமாக வீழ்ச்சியடைந்ததுடன் கொள்வனவுகளும் 1982இல் ரூ. 191,102 இலட்சத்திலிருந்து 1983இல் ரூ. 126,688 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இத்திட்டத்தின் கீழான தொழிற்பாடுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு 1982 உடன் ஒப்பிடுகையில் 1983 இல் சராசரி அமைப்பு பணவீதம் உயர்வடைந்தமையே காரணமாகும். இவ்வாண்டுக் காலத்தில் திறைசேரி உண்டியல்களின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் பொருந்தக்கூடிய கழிவு வீதங்கள் ஆண்டிற்கு 12 இற்கும் 13.75 சதவீதத்கும் இடையில் வேறுபட்டுக் காணப்பட்டது.

### கட்டாயச் சேமிப்பு நிதியம்

மத்திய வங்கியானது 1971 எண் 6 கொண்ட கட்டாயச்சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருவாய், கட்டாயச் சேமிப்புக்கள் மீதான உச்சவரம்புச் சட்டத்தினதும் நியதிகளில் சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனுகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின் சார்பாக கட்டாயச் சேமிப்பு நிதியத்தின் நிருவாகத்தையும் மேற்கொண்டது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் வங்கி பெற்ற 1,443 மீளளிப்பு விண்ணப்பங்களின் மீது உதவித் தொகை செலுத்தியோருக்கு ரூ. 64 இலட்சம் (வட்டியுட்பட) கொண்ட தொகை மீளச் செலுத்தப்பட்டது.

### அரசாங்கக் கணக்குகள்

அரசின் வங்கியாளராகிய மத்திய வங்கி, தனது வங்கித் திணைக்களத்தின் அரச கணக்குக் கிளையானது தொடர்ந்தும் அரச திணைக்களங்கள், அரச முகவர்களும் நிறுவனங்களும், குறிப்பிட்ட சட்ட நியதிச் சபைகள் ஆகியவற்றின் கணக்குகளைப் பேணிவருகின்றது. 1983 திசெம்பர் இறுதியில் அரச கணக்குக் கிளையிலுள்ள தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை (அரச திணைக்களங்கள் 139 ஏனையவை 15) 154 ஆக விளங்கியது.

## நாணய வெளியீடு

1983 திசெம்பர் 31இல் மொத்த நாணயச் சுற்றோட்டம் ரூ. 81,735 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டின் தொடர்பான எண் தொகைக்கு மேலாக ரூ. 13,170 இலட்சங்கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 1983ஆம் ஆண்டின் நாணயத்தாள் சுற்றோட்டம் முன்னைய ஆண்டினைவிட ரூ. 12,645 இலட்சத்தினுலும், குத்திகளின் சுற்றோட்டம் ரூ. 525 இலட்சத்தினுலும் அதிகரித்தன. மீளாய்வுக்கான ஆண்டுக் காலத்தில் ரூ. 1,000 இன, ரூ. 500 இனப் பெறுமதிமிக்க நாணயத் தாள்களின் கேள்வி கணிசமானளவுக்கு அதிகரித்தது ரூ. 500 இன, ரூ. 1,000 இன நாணயங்களின் சுற்றோட்டம் 1983 திசெம்பர் இறுதியில் முறையே ரூ. 15,335 இலட்சங்களாகவும், ரூ. 20,115 இலட்சங்களாகவும் விளங்கின. இவ்விரு இனங்களின் சுற்றோட்டத்தில் ஏற்பட்ட உயர்ச்சியின் விளைவாக ரூ. 100 இன நாணயத்தாள்களின் சுற்றோட்டமானது முன்னைய ஆண்டினைவிட ரூ. 2,975 இலட்சங்களால் வீழ்ச்சியடைந்தது.

விரைவில் நாணயத் தாள்களுக்குப் பதிலீடாக ரூ. 2, ரூ. 5 இன நாணயக்குத்திகளை வழங்குவற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

## வங்கித் தொழில் அபிவிருத்தி

மீளாய்வுக்கான ஆண்டுக் காலத்தில் வர்த்தக வங்கித்துறை தொடர்ந்தும் விரிவடைந்தது. உள்நாட்டு வங்கிகளின் கிளை வலையமைப்பு 16 இனால் அதிகரித்தது. (இலங்கை வங்கி 11, மக்கள் வங்கி 3, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி 1, வரையறுக்கப்பட்ட அட்டன் நெசனல் வங்கி 1) 1983 இறுதியில் வர்த்தக வங்கிகளின் உள்நாட்டுக் கிளைகளின் வலையமைப்பு இலங்கை வங்கியின் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் உட்பட 679 கிளைகளைக் கொண்டிருந்தது.

இவ்வாண்டுக் காலத்தில் ''வரையறுக்கப்பட்ட மக்கள் வணிக வங்கி'' என்ற பெயரில் ஒரு வணிக வங்கித் தொழில் கூட்டுநிலையம், மக்கள் வங்கியால் ஐக்கிய இராச்சியத்தின் மேச்சன்ட் வங்கியியல் நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஜின்னஸ் மாகொன் கூட்டு நிலையத்துடனுன கூட்டு முயற்சியுடன் நிறுவப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக வங்கித் தொழில் நிதியியல், வியாபார நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவின் விளைவாக தனி வர்த்தக வங்கித் தொழிலுக்கு நிதியியல் பணிகளுக்கு உதவுவதற்கான தேவை ஏற்றுக்கொள்ளப்பட்டதனுல் இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.

வெளிநாட்டு வங்கிகளும் ஏனைய நிறுவனங்களும் இலங்கையில் வங்கித்தொழில் வாய்ப்புக்களைத் தொடர்ந்தும் ஏற்படுத்துவதில் அக்கறை காட்டி வருகின்றன. இவ்வாண்டுக் காலத்தில் புதிய வெளிநாட்டு வங்கிகளெதுவும் இலங்கையில் கிளைகளைத் திறக்காத வேளையில் ஐக்கிய அமெரிக்காவின் சேஸ் மான்ஹட்டன் வங்கி என். ஏ. கொழும்பில் ஒரு கிளையைத் திறப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட த பாங்க் ஒவ் கிறெடிட் அன்ட் கொமேர்ஸ் இன்டர்நாசனல் (ஓவர்சீஸ்) (பிசிசிஐ) வங்கிக்கு கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் ஒரு கிளையைத் திறப்பதற்கும் அதே போன்று கட்டுநாயக்கா கொழும்பு பன்னுட்டு விமான நிலயத்தில் ஒரு வெளிநாட்டு நாணயத்தை பணமாக மாற்றுதலும், செலாவணி பீடத்தை அமைப்பதற்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 1983 திசெம்பர் மாதத்தில் வெளிநாட்டு நாணய பீடம் தொழிற்பாட்டினை ஆரம்பித்தது.

1983ஆம் ஆண்டு முடிவில் இலங்கையில் இயங்கும் வெளிநாட்டு உரித்துப் பெற்ற வங்கிகளினதும் அவற்றின் கிளைகளினதும் மொத்த எண்ணிக்கை 21 ஆக இருந்ததுடன் அவற்றில் 14, 1977 ஆம் ஆண்டிற்குப் பின் நிறுவப்பட்டவையாகும். 1982 முடிவில் இலங்கையில் இவ்வாறு தொழிற்பாட்டிலிருக்கும் 25 வர்த்தக வங்கிகளில் 4 உள்நாட்டு வங்கிகளும் 21 வெளிநாட்டு வங்கிகளும் உள்ளடங்கியுள்ளன. அத்துடன் வெளிநாட்டு வங்கிகளின் 2 பிரதிநிதித்துவ அலுவலகங்களும், 2 வணிக வங்கிக் கூட்டு நிலையங்களும் (1982இல் இலங்கை வங்கி வரையறுக்கப்பட்ட மேச்சன்ட் பாங் ஒவ் ஸ்ரீ லங்கா என்ற பெயருடைய ஒரு வணிக வங்கியை நிறுவியுள்ளது) நாட்டில் தொழிற்படத் தொடங்கின. 1981ஆம் ஆண்டு மாச்சு 17ஆம் நாள் இடம்பெற்ற குடித்தொகை அளவீட்டின் அடிப்படையில் 1983 திசெம்பர் 31ஆம் நாளன்று 21,870 (ஏறக்குறைய) பேர்கொண்ட குடித்தொகைக்கு ஒரு வங்கிக் கிளை எனக் கணக்கிடப்பட்டுள்ளது..

நாடெங்கிலும் நல்லமுறையில் கணிசமானளவு வங்கிக் கிளைகள் வலையமைப்பில் நிறுவப்பட்டுள்ளபோதும், கிராமியப் பகுதிகளில் போதியளவுக்கு பணியாற்

றப்படவில்லை. ஆகவே மத்திய வங்கி உருவாக்கியிருக்கும் ஒரு வங்கி அபிவிருத்தித் திட்டம் ஒரு பிரதேசத்தின் சிறப்பான தேவைகளையும் தேவையான துறைகளுக்கு நோக்க அடிப்படையில் கொடுகடன் விரிவினை அடைவதனையும் உள்ளடக்கும் தேவை அடிப்படையிலான கிளை விரிவாக்க நிகழ்ச்சித்திட்டத்தினை அடைவதனை எதிர்பார்க்கின்றது.

## வங்கி மேற்பார்வை

1983ஆம் ஆண்டில் நாணய விதிச் சட்டத்தின் 29(1) பிரிவின்கீழ் பத்தொன்பது வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்புக்களை செய்து முடித்ததன் மூலம் 1982 - 1983 காலப்பகுதிக்கான பரீட்சிப்பு இலங்கையில் தொழிற்படும் ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் பரீட்சிப்புக்களையும் நிறைவு செய்தது.

1979ஆம் ஆண்டின் நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் கட்டுப்பாட்டு விதி எண் 27 இன் கீழ் நாணயச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களையும் மேற்பார்வை செய்தலும், பரீட்சிப்பதும் 1983 இலும் தொடர்ந்தது. இச்சட்டத்தின் பிரிவு 15 (1) இன் கீழ் எட்டு நிதிக் கூட்டு நிலையங்களைப்பரீட்சிக்கும் வேலைகள் 1983ஆம் ஆண்டுக் காலத்தில் தொடங்கியதுடன் அவற்றின் மூன்றின் பரீட்சைகள் முற்றுப்பெற்றன. அத்துடன் 1982 இல் ஆரம்பிக்கப்பட்ட நான்கு நிதிக் கூட்டு நிலையங்களுக்கான பரீட்சைகளும் இவ்வாண்டுக் காலத்தில் முடிவுற்றன. இந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்வதற்காக நிதிக் கூட்டு நிலையங்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மதிப்பிடப்பட்டு இவ்வாண்டுக் காலத்தில் ஒரு நிதிக் கூட்டுநிலையம் நாணயச் சபையுடன் பதிவுசெய்துகொள்ளப் பட்டுள்ளது.

மீளாய்வுக்கான காலத்தில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளினால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளில் கொடுக்கல் வாங்கல்களை மேற்பார்வைசெய்யும் செயற்றிட்டம்மேலும் தொடர்ந்தது.

## அபிவிருத்தி நிதி

1983ஆம் ஆண்டில் மத்திய வங்கியிலிருந்தான நடுத்தர நீண்ட தவணை மீள் நிதியிடல் கடன்களுக்கான கேள்வி தொடர்ந்தும் குறைவாகவே இருந்தது. வங்கித் தொழில் அமைப்பின் மேலதிக திரவத்தன்மை இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான (தேஅவ) மீள் நிதியிடல் திருப்பிவிடப்பட்ட சிறிய, நடுத்தர கைத்தொழிற் கடன்கள் திருப்பப்பட்டமை ஏற்றுமதி சார்ந்த செயற்றிட்டங்களுக்கு மீள் நிதியிடல் வழங்கலுக்கான அளவின் குறைப்பு முதலீட்டு நடவடிக்கையிலேற்பட்ட வேகக்குறைவு உணவகங்கள் செயற்றிட்டத்திற்கான மீள் நிதியிடலை இடைநிறுத்தியமை என்பன மீள் நிதியிடற் கேள்வியிலான வீழ்ச்சிக்கு உதவின.

1983 மாச்சில் நடுத்தர, நீண்ட தவணைக் கொடுகடன் நிதியக் கடன்களுக்கான எல்லா வகைகளுக்குமான பொருந்தத்தக்க வீதங்கள் 1 சதவீதத்தினால் குறைக்கப்பட்டது. IIIஆம் IVஆம் வகைகளின்கீழ் வங்கிகளுக்கு அனுமதிக்கப்பட்ட அளவு எல்லை ஆண்டொன்றிற்கு 5இலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. 1983 ஏப்பிரல் 20ஆம் நாள் தொடக்கம் வகை IIஇன் கீழ் ஏற்றுமதி சார்ந்த செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் வழங்கப்பட்ட தவணைக்கடனில் 100 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இந்த மாற்றங்கள் அபிவிருத்தி வங்கிகளால் இதே நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட மீள்நிதியிடல் வீதங்களுடன் மத்திய வங்கி மீள் நிதியிடல் வீதங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கு உதவின.

1983இல் தேசிய அபிவிருத்தி வங்கியினுல் (தேஅவ) நிதியிடப்பட்ட சிறிய நடுத்தரக் கைத்தொழிற் கடன் திட்டங்களின் கீழான கொடுகடன் உத்தரவாத வழங்கல்கள் குறைவாகவே இருந்தன. வங்கிகள் முன்னைய ஆண்டின் இந்த இரண்டு திட்டங்களின் கீழும் பெறப்பட்ட 260 விண்ணப்பங்களுக்கும் எதிராக 93 கொடுகடன் உத்தரவாதங்களுக்கான விண்ணப்பங்களை வழங்கியதுடன் அவை சிறிய நடுத்தர கைத்தொழிற்றிட்டம் I இன் கீழ் 47 இனையும் சிறிய நடுத்தர கைத்தொழிற் திட்டம் II இன் கீழ் 46இனையும் உள்ளடக்கியிருந்தன. சிறிய நடுத்தரக் கைத்தொழில் Iஇன் கீழான நடவடிக்கைகள் தேசிய அபிவிருத்தி வங்கியினுல் பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பின் கொடுகடனின் முழுமையான பயன்பாட்டின் காரணமாக செயலிழந்தன. பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பினுல் நிதியிடப்பட்ட கொடுகடன் வரிசையில் சிறிய நடுத்தர கைத்தொழில் IIஇன் திட்டத்தின் குறைந்த ஆர்வத்திற்கும் உள்ளார்ந்த வளம்மிக்க தொழில் முயற்சியாளரிடையில் காணப்பட்ட ஆர்வமின்மையும் வங்கித்தொழில்முறையில் உள்ள கூடிய திரவத்தன்மையும் காரணங்களாக இருந்தன. அத்துடன் 1983ஆம் ஆண்டின் முற்பகுதியில் சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டம் IIஇன் கடன் வழங்கும் வீதம் 20 சதவீதமாக நிலவியது. சிறிய நடுத்தர கைத்தொழில் Iஇன் கீழான கடன் வழங்கும் வீதம் ஆண்டிற்கு 15 சதவீதமாயிருந்தது. 1983இன் பிற்பகுதியில் ஒரு சரியான வழிமுறையாக சிறிய நடுத்தரக் கைத்தொழில் IIஇனுடைய கடன்கொடுக்கும் வீதம் ஆண்டிற்கு 14 சதவீதமாக கீழ்நோக்கிக் கொண்டுவரப்பட்டது.

1983இல் வங்கியானது மீள் நிதியிடல் கடன்கள் வங்கியினுல் உத்தரவாத மளிக்கப்பட்ட கடன்கள் தொடர்பான கடன்களை மீளப்பெறும் வேலைகளைத் தீவிரப்படுத்தியது. இவ்வேலைகள் தொடர்பான பிரிவானது 1979இற்கும் 1982இற்கும் இடையில் வங்கியினுல் மீள நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களுக்கான செயலாற்ற அளவீட்டினை மேற்கொண்டது. வங்கியினுல் உத்தரவாதப் படுத்தப்பட்ட சிறிய நடுத்தர அளவிலான கைத்தொழில் கடன்களினுல் எதிர் நோக்கப்பட்ட பிரச்சினைகளை மதிப்பிடும் பொருட்டு கொழும்பு, கம்பகா, கண்டி, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, பதுளை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட 227 செயற்றிட்டங்கள் நேரடிப் பரிசோதனைகளுக்கு உட்பட்டிருந்தன. பரிசோதனைகள் தொழில்நுட்ப, சந்தைப்படுத்தல், நிதிப்பிரச்சினைகளின் காரணமாக செயற்றிட்டங்களில் இருந்த குறைபாடுகளை எடுத்துக்காட்டின. குறைபாடுள்ள செயற்றிட்டங்களைப் புனருத்தாரணம் செய்வதற்கு வங்கிகளுக்கு உதவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மத்திய வங்கியால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்களின் எண்ணிக்கை 1983இல் 2,537இற்கு அதிகரித்ததுடன், ரூ. 1,220 இலட்சம் உத்தரவாதப் பொறுப்பினைக்கொண்ட 1.834 உத்தரவாதக் கடன்கள் வெளிநின்றன. பங்கு பற்றிய வங்கிகளின்படி 966 கடன்கள் செலுத்தப்படாமல் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இதன்விளைவாக கொடுகடன் மேற்பார்வை கடன்களை மீளப்பெறும் வேலை புனருத்தாரண வேலை என்பன 1983இல் பெரும் முதன்மையினைப் பெற்றது. 1983இல் உருவாக்கப்பட்ட பின்தொடர் பிரிவு 227 நிலக்கண்காணிப்புக்களைச் செய்தது. 1983 பிற்பகுதியில் தொழிற்றுறை உரிமையாளர் அபிவிருத்திப் பிரிவும் உருவாக்கப்பட்டது.

## நடுத்தர, நீண்ட தவணைக் கொடுகடன் நிதியத்தின் தொழிற்பாடுகள்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 88 ஏ இன் நியதிகளின்படி கொடுகடன் நிறுவனங்களினுல் உத்தரவாதமளிக்கப்பட்ட ஆக்க முயற்சி நோக்கங்களுக்கான கடன்கள் நடுத்தர, நீண்டதவணைக் கொடுகடன் நிதியத்தின்கீழ் மீள்நிதியிடப்பட்டன. 1983இல் ரூ. 748 இலட்சம் மீள் நிதியிடல் ஆக்கக்கூறுகளைக்கொண்ட 38 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் வகை Iஇன் கீழான ஏற்றுமதி சார்ந்த செயற்றிட்டங்களுக்கான ரூ. 365 இலட்சம்கொண்ட மீள்நிதியிடல் ஆக்கக் கூறுகளைக்கொண்ட 18 விண்ணப்பங்களையும் உள்ளடக்கியது. அட்டவணை 2.2இல் மீள்நிதியிடல் ஒப்புதல்களுக்கான பகுப்பு காட்டப்பட்டுள்ளது.

### அட்டவணை 2.2
### நடுத்தர — நீண்டகால கொடுகடன் நிதியம்
### (வகைகள் II - IVஇன் கீழ் மீள்நிதியிடலின் ஒப்புதல்கள்)

ரூபா பத்து இலட்சங்களில்

| வகுப்பு | 1981 | | 1982 | | 1983 | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீள் நிதியிடப் பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதியிடப் பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதியிடப் பட்ட தொகை |
| வகை II | | | | | | |
| ஏற்றுமதித்துறை ... | 35.4 | 32.0 | 97.7 | 97.7 | 43.7 | 36.5 |
| வகை IIIஉம் IVஉம் | | | | | | |
| (அ) வேளாண்மை ... | 30.8 | 19.1 | 1.0 | 1.0 | 27.8 | 19.2 |
| (ஆ) கைத்தொழில் ... | 76.1 | 68.1 | 65.0 | 53.4 | 9.7 | 7.0 |
| (இ) உணவகம் ... | 105.0 | 83.0 | 75.3 | 72.5 | 13.2 | 8.6 |
| (ஈ) ஏனையவை .. | 147.8 | 90.7 | 8.3 | 5.0 | 5.8 | 3.5 |
| மொத்தம் ... | 365.1 | 292.9 | 247.3 | 229.6 | 100.2 | 74.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

1983 திசெம்பர் 31இல் உள்ளவாறுன நடுத்தர நீண்டகால கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை மீள் நிதியியிடுவதற்குப் பொருத்தமான ஒழுங்கு விதிகளினதும் வீதங்களினதும் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### அட்டவணை 2.3
### நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் ஒப்புதல்களுடன் தொடர்பான வீதங்கள்

| வகை | மீள் நிதியிடல் அளவு (மொத்தக் கொடு கடனின் சதவீதம்) | கடனின் காலம் (ஆண்டுகள்) | மீள் நிதியிடல் வட்டி வீதம் (அ) செயற் றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சமும் அதற்குக் கீழும் % | மீள் நிதியிடல் வட்டி வீதம் (ஆ) செயற் றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத் திற்கு மேல் % | கொடுகடன் நிறுவனத் திற்கு அனுமதிக் கப்பட்ட எல்லை % | செயற்றிட்டத்தின் மொத்தச் செலவினத்திற் கான தொழில் முயற்சியொன்று செலுத்த வேண்டிய ஆகக் குறைந்த தொகை % |
|---|---|---|---|---|---|---|
| I | 100 | 3—15 | 7½ | 7½ | 4 | 10 |
| II | 70 | 3—15 | 9 | 10 | 2 | 20 |
| III | 60 | 3—15 | 10 | 10 | 4 | |
| IV | 60 | 3—15 | 12 | 12 | 4 | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

#### கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்

மத்திய வங்கியினுல் நிருவகிக்கப்பட்ட மூன்று கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் ஒரு செயலாற்றத் தொகுதி அட்டவணை 2.4இல் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை 2.4

## மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்

| | சிறிய அளவு கைத்தொழில்கள் (சிஅகை) | | | | சிறிய, நடுத்தர கைத்தொழில்கள் (சி ந கை-I) | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சி ந கை-II) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | | 1983 | | 1982 | | 1983 | | 1982 | | 1983 | |
| | எண்ணிக்கை | பெறுமதி ப.இ.ரூ. | எண்ணிக்கை | பெறுமதி ப.இ.ரூ. | எண்ணிக்கை | பெறுமதி ப.இ.ரூ. | எண்ணிக்கை | பெறுமதி ப.இ.ரூ. | எண்ணிக்கை | பெறுமதி ப. இ. ரூ. | எண்ணிக்கை | பெறுமதி ப.இ.ரூ. |
| வழங்கப்பட்ட கடன்கள் .. | 767 | 31.2 | 767 | 31.2 | 1,541 | 253.7 | 1,585 | 265.7 | 152(உ) | 24.8 | 185 | 43.9 |
| உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ... | 767 | 23.4(அ) | 767 | 23.4(அ) | 1,541 | 140.1 | 1,585 | 146.5 | 152 | 14.9 | 185 | 25.0 |
| முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் | 246 | 3.9 | 370 | வி.கி. | 37 | 2.7 | 193 | 8.6 | இல்லை | இல்லை | 4 | 0.4 |
| புறக்கீடு செய்யப்பட்ட/மீளப் பெறப்பட்ட உத்தரவாதங்கள் ... | 59 | 3.2 | 61 | வி.கி. | 9 | 1.3 | 29 | 7.7 | இல்லை | இல்லை | 11 | 0.8 |
| வெளிநிற்கும் கடன்கள் | 462 | 13.2(ஆ) | 315 | 8.73(ஆ) | 1,495 | 195.1(ஆ | 1,349 | 159.7 | 152 | 24.8(ஆ) | 170 | 43.0(ஆ) |
| (நிலுவைகளில் இருப்பவற்றில்) ... | வி.கி. | வி.கி. | 224 | வி.கி. | வி.கி. | வி.கி. | 697 | 103.3 | — | — | 45 | 5.4 |
| வெளிநிற்கும் உத்தரவாதங்கள் .. | 462 | 9.9(அ) | 315 | 6.54(அ) | 1,495 | 110.3(இ | 1,349 | 90.9 | 152 | 14.9(ஈ) | 170 | 24.4(ஈ) |
| அனுமதிக்கப்பட்ட/தீர்க்கப்பட்ட கோரல்கள் ... | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | இல்லை | இல்லை | 20 | 0.64 | இல்லை | இல்லை | 14 | 0.187 | — | — | — | — |
| (ii) அனுமதிக்கப்பட்ட பொறுப்புக்கள் ... | இல்லை | இல்லை | 20 | 0.41 | இல்லை | இல்லை | 14 | 0.112 | — | — | — | — |
| நிலுவையிலுள்ள கோரல்கள் ... | | | | | | | | | | | | |
| (i) வெளிநிற்கும் கடன்கள் ... | 39 | 1.1 | 29 | 1.66 | 45 | 4.32 | 89 | 12.8 | — | — | — | — |
| (ii) கோரப்பட்ட தொகை ... | 39 | 1.2 | 29 | 1.25 | 45 | 2.59 | 89 | 7.68 | — | — | — | — |

குறிப்புகள்—(அ) 75% சதவீதமானவை வெளிநிற்கும் கடன்கள்
(ஆ) மீளப் பெறப்பட்ட தவணைப் பணம் தவிர்ந்த
(இ 60% வீதமான வெளிநிற்கும் கடன்கள் ஆகக்கூடியது ரூ. 400,000
(ஈ) 60% வீதமான வெளிநிற்கும் கடன்கள் ஆகக்கூடியது ரூ. 800,000
(உ) 1983 ஆண்டுக் காலத்தாதங்கள் சி. ந. கை - I திட்டத்திற்கு மாற்றப்பட்டதையும் உள்ளடக்கும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**(i) சிறு அளவிலான கைத்தொழில்கள் (சிஅகை) கொடுகடன் உத்தரவாதத் திட்டம்.**

1978 ஏப்பிரலில் தொடங்கப்பட்ட சிறிய அளவுக் கைத்தொழில்களின்கீழான கொடுகடன் உத்தரவாதத் திட்டம் (சிஅகை) 1981இல் முற்றுப்பெற்றது. 1983இல் இக்கடன்கள் தொடர்பான கடன் மீளப்பெறல் வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதமளிப்பவரின் பொறுப்புக்களில் கடன்பட்டோரினல் 75 சதவீதமான கடன்கள் திருப்பிச் செலுத்தப்படவில்லை. 1983 முடிவில் மத்திய வங்கி 49 கோரல்களைப் பெற்றது. இவற்றில் ரூ. 414,000 தொகையினைக் கொண்ட 20 கோரல்கள் அனுமதிக்கப்பட்டு தீர்க்கப்பட்டன. ரூ. 200.000 தொகையினைக் கொண்ட ஒரு கோரல் பகிர்ந்தளிப்புக்களையும் வங்கியினல் விதிக்கப்பட்ட கடன் மீளப்பெறல் நடைமுறைகளையும் உறுதிப்படுத்தாமையினல் அது நிராகரிக்கப்பட்டது.

அட்டவணை 2.5

**கைத்தொழில்படியான பகுப்பு — சிறிய நடுத்தரக் கைத்தொழில் — I கடன்கள்**

ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில் எண். | கைத்தொழில்கள் | 1979 - 1983 | | | 1983 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்தக்கடன்கள் | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்தக்கடன்கள் | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை |
| 1. | நெல் குத்துதல் ... | 336 | 50,898 | 29,983 | 5 | 1,345 | 807 |
| 2. | மென் பொறியியல் கைத்தொழில்கள் ... | 170 | 25,744 | 14,046 | 7 | 2,790 | 1,274 |
| 3. | செங்கட்டிகளும் ஏனைய கட்டிடப் பொருட்களும் ... | 254 | 51,185 | 28,618 | 2 | 279 | 167 |
| 4. | தைக்கப்பட்ட உடுப்புகள், பத்திக், கைத்தறி விரிப்புகள் இன்னோரன்னவை ... | 140 | 21,131 | 11,081 | 8 | 1,926 | 1,016 |
| 5. | இறப்பரும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களும் ... | 30 | 8,866 | 4,440 | 3 | 945 | 567 |
| 6. | காலணிகளும் ஏனைய தோல் உற்பத்திகளும் | 22 | 3,474 | 1,834 | 4 | 1,108 | 465 |
| 7. | பனங்கட்டியும், கரும்பு உற்பத்திகளும் ... | 7 | 333 | 200 | 1 | 100 | 60 |
| 8. | தளபாடங்களும் ஏனைய மர உற்பத்திகளும் ... | 80 | 8,331 | 4,845 | 1 | 85 | 51 |
| 9. | தும்பும் தும்பை அடிப்படை யாகக் கொண்ட உற்பத்திகளும் ... | 96 | 9,211 | 5,507 | 1 | 20 | 12 |
| 10. | எழுது கருவிகளும் ஏனைய தாளுற்பத்திகளும் | 24 | 4,098 | 2,259 | 1 | 35 | 21 |
| 11. | உணவும் குடிபானங்களும் ... | 79 | 16,746 | 8,370 | 3 | 480 | 288 |
| 12. | பூச்சுக்கள், மினுக்கிகள், வண்ணமெழுதும் எண்ணெய் இன்னோரன்னவை .. | 10 | 3,677 | 1,871 | 1 | 400 | 240 |
| 13. | வானெலி, ஈருருளிகள் ஆகியவற்றிற்கான உதிரிப்பாகங்கள் .. | 12 | 1,508 | 800 | — | — | — |
| 14. | சவர்க்காரம் ஏனைய குளியலறைப் பொருட்கள் | 29 | 1,616 | 969 | — | — | — |
| 15. | கைப்பணிப் பொருட்களும், பொம்மைகளும் | 21 | 808 | 485 | — | — | — |
| 16. | சுருட்டுகளும், பீடிகளும் ... | 6 | 48 | 28 | — | — | — |
| 17. | மீன்பிடி வள்ளங்களும், உள்ளூர் கடற்றொழிலும் ... | 7 | 4,400 | 1,900 | — | — | — |
| 18. | நகைகளும் இரத்தினக் கற்களும் ... | 11 | 656 | 394 | — | — | — |
| 19. | விளையாட்டுப் பொருட்கள் ... | 3 | 94 | 56 | — | — | — |
| 20. | வேளாண்மைப் பொருட்கள் ... | 10 | 2,702 | 1,221 | — | — | — |
| 21. | கண்ணடியும் ஏனைய கண்ணடி உற்பத்திகளும் | 7 | 1,166 | 700 | — | — | — |
| 22. | பித்தளையும் அலுமினியப் பொருட்களும் ... | 45 | 6,671 | 3,456 | 1 | 243 | 146 |
| 23. | மரம் அரிதல் ... | 47 | 9,229 | 5,530 | 1 | 350 | 210 |
| 24. | அச்சகம் ... | 41 | 11,438 | 6,216 | 3 | 1,092 | 655 |
| 25. | பல்வகை ... | 98 | 21,698 | 11,620 | 2 | 800 | 430 |
| | மொத்தம் ... | 1 585 | 265,728 | 146,429 | 44 | 11,998 | 6,409 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**(ii) சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் (சிநஅகை-I) உத்தரவாதத் திட்டம்**

சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டம் Iஇன் கீழ் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினல் வழங்கப்பட்ட கடன்களும், தேசிய அபிவிருத்தி வங்கியின் மீள் நிதியிடலும் மத்திய வங்கியினல் உத்தரவாதமளிக்கப்பட்டன. இந்த உத்தரவாதங்கள் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 108இன் கீழ் வழங்கப்பட்டன. இத்திட்டம் 1979இல் தனது தொழிற்பாட்டைத் தொடங்கியது, 1983 அளவில் பன்னட்டு அபிவிருத்தி அமைப்பினல் கொடுகடன் வடிவில் இத்திட்டத்திற்கு நிதியிடப்பட்ட (120 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள்) முழுவதும் பயன்படுத்தப்பட்டன. இதன் விளைவாக 1983இல் கொடுகடன் நிறுவனங்களுக்கு 44 கொடுகடன் உத்தரவாதங்கள் மட்டுமே வழங்கப்பட்டன.

1983 திசெம்பர் 31ஆம் நாள் ரூ. 2,657 இலட்சம் கொண்ட கடன்கள் தொடர்பான 1,585 வரையிலான தொகையினைக் கொண்ட உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. இந்த உத்தரவாதங்களின் கீழான மொத்தப் பொறுப்பு ரூ. 1,465 இலட்சமாக மதிப்பிடப்பட்டதுடன் அவற்றில் ரூ. 112,000 தொகையினைக்கொண்ட 14 கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தீர்க்கப்பட்டன. 78 செயற்றிட்டங்கள் சந்தையில் ஏற்பட்ட வீழ்ச்சி, நிதித் தட்டுப்பாடுகள் முறைகேடான முகாமைத்துவம் போன்ற காரணங்களால் கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 87 இலட்சமாக மதிப்பிடப்பட்டதுடன் 1983 திசெம்பர் மாதத்தில் திருப்பிச் செலுத்தப்படாத நிலுவை ரூ. 62 இலட்சமாக இருந்தது. எனினும் சில சமயங்களில் கடன் தவணைப்பணம் வேறுவகை வருவாய்களிலிருந்து தொடர்ந்தும் திருப்பிச் செலுத்தப்பட்டது. அட்டவணை 2.5இல் சிறிய நடுத்தரக் கைத்தொழில் Iஇன் கடன்களின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு தரப்பட்டுள்ளது.

**(iii) சிறிய நடுத்தர அளவுக்கைத்தொழில்கள்(சி.ந.அ.கை. I) கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

1982 சனவரியில் தொடக்கப்பட்ட திட்டம் II 300 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் கொண்ட பன்னட்டு அபிவிருத்தி அமைப்பினல் நிதிபிடப்பட்டது. தேசிய அபிவிருத்தி வங்கியினல் வழிப்படுத்தப்பட்ட நிதியங்கள், பங்குகொள்ளும் கொடுகடன் நிறுவனங்களினல் சிநகை கடன்களை மீள் நிதியிடுகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஆகக்கூடியது ரூ. 20 இலட்சம் வரையிலான கடன்கள் ஒரு செயற்றிட்டத்திற்கு வழங்கப்படலாம். தேசிய அபிவிருத்திவங்கியினல் மீள் நிதியிடப்பட்ட கடன்கள் மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதங்களுக்குத் தகுதிவாய்ந்தவை. ஒவ்வொரு கடனும் ஆகக்கூடியது ரூ. 800,000 ஆக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் திருப்பிச் செலுத்தப்படாத தொகையில் 62 சதவீதமான அளவிற்கு மத்தியவங்கி உத்தரவாதமளித்தது. சிநகை IIஇன் கடன்களின் கடன் வழங்கும் வீதம் ஆண்டொன்றிற்கு 20 சதவீதத்திலிருந்து ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆண்டொன்றிற்கு 14 சதவீதமாக குறைக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டின் முடிவில் இத்திட்டத்தின்கீழ் 42 கடன்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது.

அட்டவணை 2.6இல் சிநகை II திட்டத்தின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டகடன்களின் கைத்தொழில் அடிப்படையிலான பகுப்பாய்வு தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.6

**கைத்தொழில் பகுப்பாய்வு – சிறிய நடுத்தரக் கைத்தொழில் 11இன் கொடுகடன்கள்**

| கைத் தொழில் எண் | கைத்தொழில் | 1982—1983 கடன் களின் எண் ணிக்கை | 1982—1983 ஒப்புத லளிக் கப்பட்ட கடன் தொகை ரூ. '000 | 1982—1983 உத்தர வாதமளிக் கப்பட்ட கடன் தொகை ரூ. '000 | 1983 கடன் களின் எண் ணிக்கை | 1983 ஒப்புத லளிக்கப் பட்ட கடன் தொகை ரூ. '000 | 1983 உத்தர வாத மளிக் கப்பட்ட தொகை ரூ. '000 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | உணவு பதப்படுத்தல் ... | 60 | 12,205 | 6,923 | 11 | 5,573 | 2,944 |
| 2. | ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் ... | 7 | 869 | 521 | 2 | 240 | 144 |
| 3. | இறப்பர் உற்பத்திகள் ... | 3 | 600 | 360 | — | — | — |
| 4. | உலோக உற்பத்திகள் ... | 39 | 5,712 | 3,417 | 9 | 1,765 | 1,059 |
| 5. | கட்டடப் பொருட்கள் ... | 5 | 1,655 | 993 | 2 | 1,400 | 840 |
| 6. | கட்டடவாக்க ஒப்பந்தம் ... | — | — | — | — | — | — |
| 7. | மர உற்பத்திகள் ... | 21 | 5,331 | 3,199 | 3 | 400 | 240 |
| 8. | ஆடைகள் ... | 13 | 5,761 | 3,056 | 4 | 4,700 | 2,420 |
| 9. | புடவைகள் ... | 2 | 355 | 213 | — | — | — |
| 10. | தொழிற்கூடத்திருத்தல் ... | 1 | 30 | 18 | — | — | — |
| 11. | பல்வகை ... | 34 | 11,409 | 6,346 | 11 | 8,075 | 4,345 |
| | மொத்தம் ... | 185 | 43,927 | 25,046 | 42 | 22,153 | 11,992 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## கிராமியக் கொடுகடன்

மத்தியவங்கி தொடர்ந்தும் வர்த்தகவங்கிகளின் கிராமிய கொடுகடன்தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்துதலையும், மேற்பார்வை செய்யும் செயற்பாட்டினையும் மேற்கொண்டிருந்தவேளையில் கிராமிய கொடுகடன் தொடர்பான கொள்கை வகுப்பதிலும் செல்வாக்கினைச் செலுத்தியது. கிராமியக்கொடுகடன் தொழிற்பாடுகளின் மீதான மத்தியவங்கியின் கட்டுப்படுத்தும் செல்வாக்கு கிராமியத்துறையில் கடன் வழங்குவதற்கு வர்த்தக வங்கிகளுக்குக் கிடைக்கக்கூடிய குறுகிய, நடுத்தர, நீண்ட தவணையில் நிதியிடலுக்கான விதிமுறைகளையும், நடைமுறைகளையும் ஒழுங்குபடுத்துவதன்மூலம் கட்டுப்படுத்தும் செல்வாக்கைச் செலுத்துகின்றது. கிராமியக்கொடுகடன் திணைக்களத்தினுல் காலத்துக்குக்காலம் பரிசோதனைகள் மேற்கொள்வதன் ஊடாக மேற்பார்வை செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வர்த்தகவங்கிகிளைகளின் கிராமியக் கொடுகடன் சொத்துக்கள், பொறுப்புக்களை பரிசீலனை செய்யும் நடவடிக்கைகள் கடந்த ஆண்டின் முடிவில் தொடங்கப்பட்டன. மத்திய வங்கியினுல் இந்தத் துறையில் கொள்கை உருவாக்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் முக்கிய கருவியாக 1981 ஒகத்து மாதத்தில் ஏற்படுத்தப்பட்ட கிராமியக் கொடுகடன் மதியுரைச் சபையானது 6 கூட்டங்களை நடாத்தியதுடன் அங்கு பல கொள்கை விடயங்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்டன.

கவனத்திற்கு எடுக்கப்பட்ட முன்மொழிவுகளில் பிரதேச அபிவிருத்தி வங்கிகளை நிறுவுவதற்கான எடுத்துரைப்பினைப் பரிசீலனை செய்தல், இறப்பர் பயிர்ச்செய்கை பண்ணுவோருக்கு உதவும் கொடுகடன் திட்டம், கரும்புப் பயிர் செய்கைக்கான ஒரு கொடுகடன் திட்டம், கிராமிய கொடுகடன் தொழிற்பாடுகள் உள்ள பகுதிகளில் அரசதுறை வங்கிகள் ஒரு நியாயமான இலாப மட்டத்தினை அடைவதற்கு உதவும் நடைமுறைகள் என்பனவும் உள்ளடங்கும். பிரதேச கிராமிய

அபிவிருத்தி வங்கிகளை நிறுவுவதற்கான சட்ட வரைவு தற்பொழுது தயாரிப்பி பிலுள்ளது. இறப்பர் துறைக்கான கொடுகடன் திட்டங்கள் இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நடைமுறையிலிருக்கும் உதவி வழங்கல் திட்டத்திற்கான குறைநிரப்பு நடவடிக்கையாகும். எடுத்துரைக்கப்பட்ட கொடுகடன் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இறப்பர் பயிர்ச்செய்கையாளருக்கு ஒவ்வொரு மீளப்பயிர் செய்கைப் பருவத்தின் தொடக்கத்திலும் பயிர்ச் செய்கை தொழிற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு உதவியளிக்கும் வகையில் பண மூலவளங்களைப் பெறுவதற்கு உதவியளிப்பதாக விளங்கியது. இந்த எடுத்துரைப்பு பரிசீலனையில் உள்ளது. கிராமியக் கொடுகடன் மதியுரை சபையானது இந்த நாட்டு வேளாண்மையாளர்கள் பன்முகப்பயிர்ச் செய்கையினை மேற்கொள்வதன் மூலம் நாடு சீனியில் தன்னிறைவு பெறுவதற்கு வழிவகுக்கும். கரும்புப் பயிர்ச் செய்கையினை ஒரு முன்னுரிமைத் துறையாக கருதி அதற்கு ஊக்கமளித்துள்ளது. அரச துறையாலும், தனியார் துறை நிறுவனங்களினாலும் நிறுவப்பட்ட சீனிக்கைத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள பகுதிகளுக்கு உதவும் பொருட்டு நாட்டின் கரும்பு ப்பயிர்செய்கையாளருக்கு வங்கிகள் ஓர் நடுத்தர, நீண்ட தவணைக்கொடுகடன் செயல்முறைத் திட்டத்தினை வழங்கின.

மீளாய்வுக்கான ஆண்டில் இத் திணைக்களம் முதன்மை கூட்டுறவு, சேமிப்பு அமைப்புக்களுக்கான கொடுகடன் திட்டம் ஒன்றினை அமைப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டது. எடுத்துரைக்கப்பட்ட கொடுகடன் திட்டத்தின் வாயிலாக தற்போது இந்த அமைப்புக்களின் நடவடிக்கைகளுக்கான முன்னேற்றம் குறைந்து வருவதாகத் தெரிவதனால் இத்தகைய முதன்மை அமைப்புக்களுக்கு மூலவளத்தினை வலுப்படுத்தும் உறுதிப்பாட்டினை அளிக்கும் என எதிர்நோக்கப்படுகின்றது. இத் திட்டத்தின் அறிமுகப்படுத்தலின் மூலம் 1984 இன் தொடக்க காலத்தில் இத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதுடன் கிராமியக் கொடுகடன் முக்கிய துறையின் கீழ் கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுவதால் அவை தற்பொழுது இருப்பதை விட கிராமியப் பகுதிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கதொரு பங்கினை வகிக்க இயலச்செய்யும்.

அட்டவணை 2.7 மத்திய வங்கியின் தொழிற்பாடான நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன் நிதியம் வகை I இன் கீழ் பொறுப்பேற்கப்பட்ட நடைமுறையில் இருக்கும் கொடுகடன் திட்டத்தின் செயலாற்றத்தினை காட்டுகின்றது. இந்தக் கொடுகடன் திட்டங்கள் மத்திய வங்கியினால் தொடக்கிவைக்கப் பட்டதுடன் உதாரணமாக கொடுகடன் திட்டங்கள் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் ஊடாக தொழில்படுத்தப்படுகின்றன. அவை வங்கிகளின் அல்லது அரச அபிவிருத்தி முகவர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுப்பதன் மூலம் அறிமுகப்படுத்துகின்றது. இவற்றில் சில பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புக்கள் (பஅஅ) / ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆஅவ) / வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் (வேஅபநி) ஆகியவற்றினால் உதவி பெறும் செயற்றிட்டங்களாகும். இந்தக் கொடுகடன் திட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள் அவற்றின் மீது குறித்து ஒதுக்கப்பட்ட பயன்பாட்டினால் ஏற்பட்ட முன்னேற்றம் போதாமலிருப்பதேயாகும். மீளாய்வுக்கான ஆண்டின் இறுதியில் ரூ. 6,540 இலட்சம் மொத்த ஒதுக்கீட்டில் ரூ. 4,210 இலட்சம் பயன்படுத்தப்படாமல் அப்படியேயிருந்தது. இது 1978 இல் I இன் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுமுதல் கிராமியத் துறையில் நடுத்தர நீண்ட தவணை கடன் வழங்கலில் முன்னெப்பொழுதும் காணப்படாத தனிச்சிறப்பாகும். எனினும் சில விடயங்களைப் பொறுத்த

அட்டவணை 2.7

**மத்திய வங்கியின் மீள் நிதியிடல் திட்டத்தின் வகை 1இன் கீழ் நாணயச் சபையினால் மீள் நிதியிடலுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்**

| கடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் (ரூ. ப. இ) | 31-12-83இல் பயன்படுத்தப்பட்டதொகை (ப. இ. ரூ.) | 31-12-83இல் பயன்படுத்தப்படாத தொகை (ப. ரூ. இ.) | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பங்கீட்டுக்கான காலப்பகுதி (ஆண்டுகள்) |
|---|---|---|---|---|---|
| **அ. 1983 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள்** | | | | | |
| 1. ஒிட் மரச் செய்கைக்காக இலங்கை வங்கி/வரையறுக்கப்பட்ட இலங்கை புகையிலைக் கூட்டு நிலையத்திற்கான கொடுகடன் திட்டம் ... | 4.50 | 3.49 | 1.01 | 03.02.79 | 3 |
| 2. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... | 50.00 | 48.16 | 1.84 | 26.03.79 | 3 |
| 3. கடற்றொழில்துறை வங்கி நிதியிடல் திட்டம் ... | 140.00 | 113.09 | 26.91 | 02.07.79 | 3 |
| 4. குள நீர்ப்பாசனம் நவீனமயப்படுத்தல் செயல்திட்டம் ... | 7.69 | 7.69 | — | 02.06.79 | 1 |
| 5. நுவரெலியா மாவட்டத்தில் பாற்பண்ணை அபிவிருத்திக்கான கடன் திட்டம் ... | 10.00 | 8.10 | 1.90 | 22.08.79 | 3 |
| 6. குருநாகல் மாவட்டத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற் திட்டத்திற்கான பண்ணைப் பொறித்தொகுதித் திட்டம் ... | 40.00 | 21.50 | 18.50 | 28.10.79 | 5 |
| 7. சம்மாந்துறைத் தேர்தல் தொகுதியின் பாற்பண்ணை அபிவிருத்தி (முன்னோடிச்) செயற்திட்டத்திற்கான கடன் திட்டம் ... | .12 | — | .12 | 27.11.79 | 3 |
| 8. மகாவலி செயற்றிட்டப் பகுதியில் குடியேறியவர்கள் இழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவும் கொடுகடன் திட்டம் ... | 55.00 | 5.40 | 49.60 | 19.11.79 | 3 |
| 9. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிறுவப்படும் வளமாக்கி களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 14.00 | 8.81 | 5.19 | 13.10.80 | 1 |
| 10. அபுதாபியினால் நிதியளிக்கப்பட்ட வடமேற்குக்கரைக் கடற்றொழில் அபிவிருத்தித் திட்டம் ... | 60.00 | — | 60.00 | 13.10.80 | 3 |
| 11. ஒிட் பயிர்ச் செய்கைகளின் கொடுகடன் திடடம் மக்கள் வங்கி/சர்வோதய/லக்மல்சல ... | 3.00 | .23 | 2.77 | 10.12.80 | 5 |
| 12. கடற்றொழில் கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 42.00 | — | 42.00 | 28.04.81 | 2 |
| 13. மாத்தளை, புத்தளம், மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி திட்டம் | 54.23 | 6.63 | 47.60 | 08.05.81 | 6 |
| 14. காற்றுடி ஆலைகளுக்கு நிதியிடலுக்கான கொடுகடன் திட்டம் ... | 2.56 | 1.05 | 1.51 | 11.12.81 | 1 |
| 15. மாத்தறை மாவட்டத்தில் இளைஞர் சுயதொழில் வாய்ப்புத் திட்டம் .. | 7.20 | .66 | 6.54 | 10.04.81 | — |
| 16. இறம்பொல, உடஅபறெக்க கிராம எழுப்புத் திட்டம் ... | — | — | — | 16.03.81 | — |
| 17. இலங்கை கிராமிய கொடுகடன் செயற்றிட்டக் கடன் திட்டம் ... | 137.00 | 4.16 | 132.84 | 01.07.82 | 1 |
| 18. தேயிலை சிறு உடமையாளர்களுக்கான வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... | 7.50 | 4.04 | 3.46 | 11.08.82 | 1 |
| 19. இலங்கை கிராமிய கொடுகடன் செயற்றிட்டத்திற்குள் அடங்காத மாவட்டங்களில் வரண்ட பிரதேச விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடுவதற்கான கொடுகடன் திட்டம் ... | 5.60 | .01 | 5.59 | 10.09.82 | 2 |
| 20. அநுராதபுர மாவட்டத்தில், கிராமஎழுப்பு சுயவேலை வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்கு நிதியிடலுக்கான கொடுகடன் திட்டம் ... | 6.00 | .23 | 5.77 | 14.10.82 | 2 |
| **ஆ. 1983 ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் திட்டங்கள்** | | | | | |
| 1. சிறிய பண்ணையுடன் கூடிய உருளைக்கிழங்கு களஞ்சியசாலை அமைப்பதற்கான கொடுகடன திட்டம் ... | 1.00 | — | 1.00 | 01.03.83 | 1 |
| 2. பதுளை மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயல்முறைத் திட்டம் ... | 7.00 | — | 7.00 | 27.09.83 | 5 |
| மொத்தம் | 654.40 | 233.25 | 421.15 | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வரையில் தொழிற்பாட்டு இலக்கு வங்கிகளின் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் அடையப்பெறவில்லை. உதாரணமாக பாற்பண்ணைத் துறையில் போதியளவு சரியான வயதுப் பாகுபாட்டையும் நலத்தையும் கொண்ட விலங்குகளை வழங்கப் பெறுவதில் ஏற்பட்ட பிரச்சினைகளால் இடையூறு ஏற்பட்டது. ஏனைய சில விடயங்களில் செயற்றிட்டங்களினை திட்டமிடலிலும் வரைவு செய்வதிலும் ஏற்படும் தவறுகைகள் இலக்கினை அடைவதில் ஏற்பட்ட தோல்விக்குரிய குற்றச்சாட்டில் முக்கிய பங்கினை வகிக்க வேண்டியுள்ளது. உதாரணமாக இலங்கை கிராமியக் கொடுகடன் செயற்றிட்டத்திற்கும், குருநாகல் மாவட்ட ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட 4 சில்லு இழு பொறிகள் எரிபொருள் விலைகளில் ஏற்பட்ட உயர்வுகளினுல் 4 சில்லு இழு பொறிகளுக்கு வேளாண்மையாளர்களிடையில் கேள்வி குறைவாக இருந்தமையினுல் பயன்படுத்தப்படவில்லை. எனினும் ஏனைய திட்டங்களில் ஏனைய ஆக்கக் கூறுகளாக கடன் வழங்கும் வங்கிகளின் சீரிய முயற்சியினுல் மற்றும் இணைப்பு முகவர்கள் என்பவற்றினுல் பயன்பாட்டு மட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றைப் பெறக்கூடியதாகவிருந்தது. வங்கிகள் பல்வேறு திட்டங்களின் இலக்குகளை அடைவதற்கு பெரியளவு ஈடுபாட்டினைக் கொண்ட கூடியளவு தேர்ச்சி பெற்ற மனிதவலுவினை வேண்டி நிற்கின்றன.

மீளாய்வின் கீழான ஆண்டில் பின்வரும் புதிய கொடுகடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1. நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் சிறிய பண்ணையினைக்கொண்ட விதை உருளைக்கிழங்குக் களஞ்சிய சாலைகளை அமைப்பதற்கான கடன்கள்.
2. பதுளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான வேளாண்மை கொடுகடன்

கடன் பெறுபவர்களுக்கு உதவும் வகையில் நடைமுறையில் இருக்கும் திட்டங்களுள், பலவித சீராக்கங்கள் செய்யப்பட்டன. மீன்பிடித்துறை வங்கி நிதியிடல் திட்டத்தில் குறிப்பிட்ட சில படகுகள் தொடர்பாக கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு உதவவும், ஓரளவுக்கு நிவாரணம் வழங்கவும் வேண்டி கடனைப் பெற்றோருக்கு கடனைத் திருப்பிச் செலுத்தும் தவணை நீடிக்கப்பட்டது. ஏனைய சில திட்டங்களில் தொழிற்பாட்டு ஆக்கக்கூறுகள் மாற்றப்பட்டு உடனடிக் கேள்வியுள்ள விடயங்களுக்கு நிதியங்கள் மீள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

மத்திய வங்கியின் மாத்தறை பிரதேச அலுவலகத்தினுல் செயற்படுத்தப்பட்ட சுய வேலைவாய்ப்பு கிராமிய ஏற்புத்திட்டத்தின் 1982 ஆம் ஆண்டின் அனுபவத்தில், நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உதவியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் அளவினை ரூ. 6,000 த்திலிருந்து ரூ. 12,000 இற்கு அதிகரித்ததன்மூலம் பிரதேச அலுவலகத்திற்கு இந்தப் பகுதியில் மேலும் பெரிய செயற்றிட்டங்களை மேம்படுத்துவதற்கு இயலக்கூடியதாயிருந்தது. அத்துடன் மாத்தறை, பிரதேச அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ்வரும் மொனருகலை அம்பாந்தோட்டை மாவட்டங்களின் பகுதிகளும் உள்ளடக்கப்பட்டதுடன் இந்த வங்கித் திட்டத்தினுள் நீர்ப்பாசன ஆக்கக்கூறு, இரண்டு சில்லு இழு பொறிகளை அடிப்படையாகக் கொண்ட பண்ணை வலு ஆக்கக்கூறும் ஒன்றிணைக்கப்பட்டன. இதே மாதிரியான திட்டம் அநுராதபுர மாவட்டதிலும் தொழிற்பாட்டிலிருந்தது. அநுராதபுரத்தில் இந்தச் செயல்முறைத் திட்டம் தரைக் கீழ் நீரினைத் திறந்த கிணறுகளிலிருந்து பம்புகளின்மூலமும் காற்ருடி ஆலைகளின் மூலமும் நீரைப்பெறும் சிறு நீர்ப்பாசனத் திட்ட முறைகளை ஊக்குவிப்பதை வலியுறுத்துகின்றது.

இலங்கை கிராமிய கொடுகடன் செயற்றிட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியளித்ததுடன் மத்திய வங்கி இணைப்பு முகவராக முக்கிய இடத்தினை வகிப்பதால் இவ்வாண்டுக் காலத்தில் திருப்தியான செயற்பாட்டைக் கொண்டிருந்தது. விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய மொத்த 2 சில்லு இழு பொறிகளின் மொத்தத் தொகையைக் கேள்வி விஞ்சியுள்ளதன் காரணமாக 1984 இன் முதற் காலாண்டிலேயே 2 சில்லு இழு பொறிகளின் விற்பனை முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச்செயற்றிட்டத்தின் கீழான நீர்ப்பாசன ஆக்கக்கூற்று வேலைக்கான நிருவகிக்கும் முகவரான நீர்வளச்சபை செயற்பாட்டினைக் காட்டியுள்ளதுடன், 1984 முற்பகுதியில் நீர்வளச் சபையானது கருவிகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

1982 இல் தொடக்கப்பட்ட மீள அட்டவணைப்படுத்தும் திட்டமானது இவ்வாண்டுக் காலத்தில் தொழிற்பட்டதுடன் விண்ணப்பங்களுக்கான இறுதி நாள் 1984 யூன் மாதம் 30 ஆம் நாளுக்கு என நீடிக்கப்பட்டுள்ளது. எனினும் இத்திட்டத்தின் முன்னேற்றத்தில் முழுமையான பற்ருற்குறை ஏற்பட்டது. இலங்கை வங்கியிடம் இருந்து பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தவறியவர்களின் மொத்த எண்ணிக்கை 82,300 வரையில் காணப்பட்ட வேளையில் மொத்த விண்ணப்பங்கள் 2,050 ஆக விளங்கின.

மீளாய்விற்கான ஆண்டுக் காலத்தில் மத்திய வங்கி 19 வர்த்தக வங்கிளின் கூட்டுறவு வங்கிகளினதும் கிராமியக் கொடுகடன் சொத்துப் பட்டியல்களை பரிசீலனை செய்தது. அவை 7 மக்கள் வங்கிக் கிளைகளையும் 7 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளையும் 3 இலங்கை வங்கிக் கிளைகளையும் 2 வேளாண்மைப் பணி நிலையங்களை காலி, பொலனறுவை, அம்பாந்தோட்டை, குருநாகல், மொனருகலை மாவட்டங்களுடன் இணைந்துள்ளமையையும் உள்ளடக்கியுள்ளன. பரிசீலனை அறிக்கைகள் முடிவு பெற்றுள்ளதுடன் அவை வங்கிகளுக்கு வழங்கப்பட்டு அவர்களிடமிருந்து ஒரு இணக்க அறிக்கை கேட்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் மாத்தறைப் பிரதேச அலுவலகத்தினுல் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் முன்னேற்றம் பற்றிய இடைக்கால அளவீடு மேற்கொள்ளப்பட்டு இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை மீளச் செலுத்துதலில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றி மதிப்பிடப்பட்டது. இந்த அறிக்கை பூர்த்தியாக்கப்பட்டு இவ்வாண்டுக்காலத்தில் வழங்கப்பட்டது. இதற்குமேலாக ஒகிட் மரப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சிறிய உடைமையாளர்களுக்கான கடன்களின் பயன்பாடு பற்றிய அளவீடும் 1982இல் மேற்கொள்ளப்பட்ட களுத்துறை மாவட்டத்தில் வழங்கப்பட்ட கடற்ருெழில் கடன்கள் மீதான அளவீடும் இவ்வாண்டுக் காலத்தில் பூர்த்தியாக்கப்பட்டது.

## அளவீடுகள்

1978/79 ஆண்டிற்கான நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீடு பற்றிய அறிக்கை பகுதி I 1983 மாச்சு மாதம் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை அளவீட்டுத் தரவு பற்றிய பகுப்பாய்வினைச் செய்து பின்னிணைப்பு அட்டவணைகளைச் சமர்ப்பித்தது. 1981/82 ஆண்டிற்கான நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார அளவீட்டின் தரவுகளை அட்டவணைப்படுத்தும் வேலை 1983 ஆம் ஆண்டுக் காலத்தில் முடித்துவைக்கப்பட்டது. இவ்வறிக்கையில் இரண்டு பகுதிகளும் 1984 நடுப்பகுதியில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் திட்டமிடப்பட்ட முதலீடுகளினதும், அரச தனியார் வரையறுக்கப் பட்ட பொறுப்புக் கூட்டு நிலையங்களின், வர்த்தக நடவடிக்கைகளினதும் அளவீடு 1983 யூனில் இருந்து ஒற்றோபர் வரை மேற்கொள்ளப்பட்டது. அறிக்கை 1984 ஏப்பிரலில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1983இன் இரண்டாவது அரைப்பகுதியில் தொழில் வாய்ப்பு, தொழில் வாய்ப்பின்மை மீதான தொடர்ந்த அளவீட்டின் திட்டமிடலும், நடைமுறைப் படுத்தல் தொடர்பான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இது இந்த நாட்டின் தொழில்முறை, தொழில் வாய்ப்பின்மை, குறைந்த தொழில்நிலை தொடர்பான ஆழமான ஆய்வாகும். 1984 யூலையில் தொடங்கி ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டக்குறி அளவீடு மேற்கொள்ளப்படவிருக்கின்றது. நிலையான மாற்றங்களுக்குட்படக்கூடிய முக்கிய மாறிலிகள் மீதான காலாண்டுத் தொடர்த் தரவுகளைக் கட்டியெழுப்புவதற்கான சாத்தியக்கூறுகள் பரிசீலிக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றன.

இலங்கையில் 1970ஆம் ஆண்டு தொடக்கம் வாழ்க்கைத் தரங்களினதும், கொள்கைகளினதும் படிமுறை வளர்ச்சி பற்றி உலக வங்கியுடனான கூட்டிணைப்பு பற்றிய ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கையில் வாழ்க்கைத்தரங்களின் போக்கு பற்றிய பகுப்பாய்வினை நோக்கமாகக் கொண்டு அரசினால் ஊக்கமளிக்கப்பட்ட கொள்கை தொடக்கச் சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டதாகும்.

இறக்குமதிகளுக்காகத் திறக்கப்பட்ட கொடுகடன் பத்திரங்கள் மீதான மாதாந்தத் தரவுகளைப் பெறுவதன்மூலம் இறக்குமதித் தாராளமாக்கலின் மீது மேற்பார்வையைத் தொடர்ந்தும் வங்கி மேற்கொண்டது.

## கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி வர்த்தக வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்தான 554 நடுத்தர, மூத்ததர மட்டங்களிலான முகாமை ஆளணியினருக்காக இருபத்தியொரு பயிற்சி நெறிகளையும், ஆய்வரங்கு களையும் தொழிற்கூடங்களையும் ஒழுங்குசெய்து நடத்தியது. "வெளிநாட்டுச் செலாவணியில் எதிர்பாரா இடர்க்காப்புக்களும் கட்டுப்பாடுகளும்" என்ற செயல் முறைத் திட்டம், கொழும்பு சிற்றி வங்கியின் இணைந்த ஆதரவுடன் நடத்தப் பட்டவேளையில் "பயிற்சியாளர்கள் பயிற்சி செயன்முறைத்திட்டம்" என்பன சிறப்புப் பணியின்கீழ் நாட்டுக்கு வருகைதந்த வெளிநாட்டு ஆலோசனையாளர் குழுவினால் நடாத்தப்பட்டது.

இந்த பயிற்சிச் செய்முறைத்திட்டங்கள், கொடுகடன் முகாமைத்துவம் செயற்றிட்டங்களை அடையாளம் கண்டு மதிப்பிடல், வர்த்தக வங்கித்தொழில், முதலீட்டுச் சந்தைத் தொழிற்பாடுகள், முகாமைத்துவ அபிவிருத்தி, விலங்கு வளர்ப்புத் திட்டங்கள், சிறிய பணப்பயிர்த் தோட்டங்கள், கப்பற் தொழிலும் உள்ளூர் மீன்பிடித் தொழிலும், வணிக வங்கித்தொழிலும் கரைகடந்த வங்கித் தொழிலும் ஆகிய தொடர்பான துறைகளை உள்ளடக்கியிருந்தன.

கிராமிய வங்கித்தொழில் கொடுகடன் துறையில் அலுவலர்களைப் பயிற்று விப்பதே பயிற்சியில் முன்னுரிமை பெறுகின்றது. வெளியிடங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.

1983 செத்தெம்பரில் கல்லூரி தனது தொழிற்பாட்டில் இரண்டாவது ஆண்டினை நிறைவு செய்கின்றது. கல்லூரியின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழாச் சொற்பொழிவு "அபிவிருத்தியில் வங்கிகளின் பங்கு" என்னும் தலையங்கத்தில் நிதித் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் கலாநிதி டபிள்யூ. எம். திலகரத்ன அவர்களினால் ஆற்றப்பட்டது.

## வெளியீடுகள்

நாணயவிதிச் சட்டத்தின் 35ஆம் பிரிவின் நியதிகளின்படி மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சருக்கு 1982ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கை கையளிக்கப்பட்டது. பொருளாதார மீளாய்வு 1982 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வெளியிடப்பட்ட வேளையில் மாதாந்தச் செய்தித்திரட்டு ஒழுங்காக வெளியிடப்பட்டது.

இவ்வாண்டுக்காலத்தில் உயர் அலுவலர் ஆய்வு மலர் 11 இதழ் 1உம் 2உம் மலர் 12 இதழ் 1 உம் ஆகிய இரண்டு வெளியீடுகள் வெளியிடப்பட்டன. பொருளாதார சமூக புள்ளிவிபர மலர் 5உம் வெளியிடப்பட்ட வேளையில், பொருளாதார அடிப்படைத் தரவுகளைக் கொண்ட சமூக, பொருளாதார தரவுஏடும் வெளியிடப்பட்டது. நாடளாவிய தரவு சேகரிப்பு அமைப்பின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளடங்கிய, விலையும் கூலியும் புள்ளிவிபரங்கள் - 1982 மீளாய்விற்குரிய ஆண்டின் காலப்பகுதியில் வெளியிடப்பட்டது.

அத்துடன் இவ்வாண்டுக்காலத்தில் இலங்கையில் வங்கித்தொழில் முறைக்கான நெறிமுறைகள் என்ற தலைப்பிலான கொடுகடன் செய்தித் திரட்டு இதழ் 3 உம் வெளியிடப்பட்டது. சிறப்பிதழ்கள் எண் 5 கிராமிய அபிவிருத்தியின் தொடக்கக் காரணிகள் என்ற தலைப்பில் ஆளுநரினால் ஆற்றப்பட்ட உரையும் இதழ் 6இல் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழாவில் கலாநிதி டபிள்யூ. எம். திலகரத்ன அவர்கள் அபிவிருத்தியில் வங்கிகளின் பங்கு என்ற தலைப்பில் ஆற்றிய உரையும் வெளியிடப்பட்டன.

வங்கியின் செய்தி ஆய்வு வெளியீடும் "சற்றகன" என்ற சிங்கள வெளியீடும் தொடர்ந்தும் வெளியிடப்பட்டதுடன் இவ்விரண்டு வெளியீடுகளும் அவற்றிற்கு இருக்கும் கேள்விமூலம் வாசிக்கும் பொதுமக்களிடம் அவைபெற்றுள்ள பிரபல்யம் உணரப்படுகின்றது.

## பயிற்சி

மீளாய்வின் கீழான ஆண்டில் கல்விசார்ந்த, கல்விசாரா (செய்முறைப்பயிற்சி) துறைகளில் அலுவலர்களைப் பயிற்றுவித்தல் தொடர்ந்தது.

பொருளியல் துறையில் பட்டப் பின்படிப்புக்களுக்காக ஐந்து அலுவலர்கள் வெளிநாட்டிற்கு சென்றனர். ஐம்பத்திஎட்டு அலுவலர்கள் முக்கியமாக கிராமிய, வேளாண்மை கைத்தொழில் கொடுகடன், வங்கித்தொழிலும் பொருளியலும் ஆகிய துறைகளில் குறுகிய தவணை பயிற்சிச்செய்முறைத்திட்டங்களுக்காக வெளிச் சென்றனர்.

இதே நேரத்தில் உள்ளூரிலும் முக்கியமாக வங்கியினது கிராமிய வங்கித் தொழிலும், அலுவலர் பயிற்சி கல்லூரியிலும் பயிற்சிநடாத்தப்பட்டது. இலங்கையில் வங்கித்தொழில், நிதியியல் துறைகளில் உள்ள ஆளணிக்கு இக்கல்லூரி பயிற்சியளிப்பதில் முக்கிய மூலமாக விளங்குவதால் மத்திய வங்கி அலுவலர்களைப்பயிற்

சிக்காக ஏனைய உள்ளூர் பயிற்சி நிலையங்களுக்கு அனுப்புவது குறைக்கப்பட்டது. இக் கல்லூரியில் மொத்தமாக 71 அலுவலர்கள் பயிற்சித்துறைகளில் ஈடுபட்டனர். மத்திய வங்கி அலுவலர்களுக்காக இலங்கை வங்கியிலும், மக்கள் வங்கியிலும் இடம்பெற்ற வர்த்தக வங்கித் தொழில் செயல் முறைகள், தொழிற்பாடுகள் பற்றிய பயிற்சிச் செய்முறைத் திட்டங்கள் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடைபெற்றதுடன் 1984இலும் கூட தொடர்ந்தும் நடைபெறும்.

## ஆய்வரங்குகள்

கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி ஒழுங்குபடுத்தியஆய்வரங்குகளுக்கு மேலதிகமாக வங்கி நடைமுறை விடயங்களிலான தலைப்புக்களில் ஆய்வரங்குகளை ஒழுங்கு செய்தது. இத்தகைய ஆய்வரங்குகளில் முதலாவது வட்டிவீதங்கள் பற்றியது, கொழும்பில் இடம்பெற்ற வேளையில் இரண்டாவதாக கிராமிய கொடுகடன் அபிவிருத்தி பற்றியது கிராமியப் பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பெருந்தொகை மக்கள் பங்குபற்றும்வகையில் பதுளையில் இடம்பெற்றது. இந்த ஆய்வரங்கின் நோக்கமானது வேளாண்மைக் கைத்தொழில், சுயவேலைவாய்ப்புச் செயற்றிட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளன. வசதிகளைப் பயன்படுத்தக் கற்றுக்கொடுத்ததுடன் இது தொடர்பாக மத்திய வங்கியின் பங்கினைப் பிரபலயப்படுத்துதலுடன், கிராமியப் பகுதிகளில் உள்ள வங்கி அலுவலர்களை, கிராமியக் கொடுகடன் பற்றிய புதிய போக்குகளைப் பற்றிய அறிவினைப் பெறுவதற்கு உதவுவதும் ஒழுங்கான அடிப்படையில் இந்தத் துறைகளில் தரவு சேகரிப்பதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதுமாகும்.

## வாடிக்கையாளர் பணி

1981 நடுப்பகுதியில் நிறுவப்பட்ட வங்கித் தொழில் வாடிக்கையாளர் பணிக்கான குழுவானது விரிவடைந்த பொருளாதாரத்தின் விளைவால் வாடிக்கையாளருக்கு வர்த்தக வங்கிப் பணிகளை முன்னேற்றும் முக்கிய நோக்கத்தினைக்கொண்டு இயங்கி வருகின்றது. இது மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள் மற்றும் குறிப்பிட்ட அபிவிருத்தி மயப்படுத்தப்பட்ட அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள் ஆகியவற்றின் மூத்த உயர்அலுவலர்களை உள்ளடக்கியிருந்தது. 1983ஆம் ஆண்டுக் காலத்தில் இந்தக் குழு முக்கியமாக காசோலைகளையும் வெளிநாட்டு வரைவுகளையும் பணமாக மாற்றுதல் கடன் வழங்கல்கள் போன்ற வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை விரைவுபடுத்துதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தியது. இக்குழுவானது, ஏற்றுமதித் துறைக்கு வங்கி நிதியிடலுக்கான முன்னேற்பாடுகளை விபரமாக பரிசீலனையும் செய்தது. அத்துடன் இக்குழு வங்கிகளுக்கும், வாடிக்கையாளருக்கும் உதவும் வகையில் வங்கிகளின் தகவல் பணிகளை பரவலாக்க வேண்டிய தேவையினைப்பற்றியும் ஆய்வுரை நடாத்தியது.

## சிறப்பு பணிக்குழு

1983 யூலையில் வர்த்தக, கைத்தொழில் முயற்சிகளுக்கு விளைவிக்கப்பட்ட இழப்பீடுகளை மதிப்பிடுவதற்காக மாண்புமிகு நிதி அமைச்சர் ஒரு சிறப்பு பணிக்குழுவினை நியமித்தார். இந்தச் சிறப்பு பணிக்கு புள்ளிவிபரவியல் பணிப்பாளரினால் தலைமைவகிக்கப்பட்டதுடன் நிதித் திட்டமிடல், கைத்தொழில் அறிவியல் அலுவல்கள், புடவைக் கைத்தொழில், வர்த்தகம் கப்பற்றுறை ஆகிய அமைச்சுக்களினதும் மத்திய வங்கியினதும் மூத்த உயர் அலுவலர்களையும் உள்ளடக்கியிருந்தது. 1983 ஒகத்து 16ஆம் நாள் சிறப்பு பணிக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

## பிரதேச அலுவலகம்- மாத்தறை

1983ஆம் ஆண்டுக் காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் மாத்தறை பிரதேச அலுவலகம் தனது முன்னேடிச் செயற்றிட்டங்களாக தொடக்கத்தில் அறிமுகப்படுத்திய கிராமியக் கொடுகடன் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் விரிவடையச் செய்தது. அதற்கமை சுயவேலைவாய்ப்புத் திட்டம் கிராம ஏற்புத்திட்டம் என்பன பிரதேச அலுவலகத்தினுல் செயல் திறனுடன் ஊக்குவிக்கப்பட்டதுடன், அப்பகுதிகளிலுள்ள வங்கிகளுக்கு செயற்றிட்டங்களை அடையாளம் காணவும் பயிற்சிச் செய்முறைத் திட்டங்களை நடாத்தவும் வங்கிக்கு உதவியளித்தது.

கோழிப்பண்ணைகள், பாற்பண்ணைகள், பட்டுப்பூச்சி வேளாண்மை மற்றும் சிறிய கைத்தொழில் பணிகள் போன்ற துறைகளுக்கு வங்கிகளிடம் இருந்து எதிர்கால வாய்ப்புக்களை எதிர்நோக்கிய கடன்பெறுவோருக்கு- தொழில் நுட்ப முகாமைத்துவ தேர்ச்சியினை அளிப்பதற்கு பயிற்சிச் செயல் முறைத்திட்டங்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன. இத்திட்டம் அந்தப் பகுதியிலுள்ள வர்த்தக வங்கிகள் அரசநிறுவனங்கள் இது தொடர்பான முகவர்கள் ஆகியவற்றின் உதவியுடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த பயிற்சிச் செயல்முறைத் திட்டங்களின் கீழ் எல்லாமாக 36 பயிற்சி நிகழ்ச்சிகளில் 1,361 பேர் கலந்துகொண்டனர். அடிப்படைப் பயிற்சி ஏற்பாடுகள் இயலக்கூடிய பொருளியல் செயற்றிட்டங்களில் நிலக்கள பரிசோதனைகள் மதிப்பிடப்பட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் போன்றவையும் கொண்டிருந்தன. இதற்கு மேலாக நல்ல எதிர்காலத்தை எதிர்நோக்கியிருக்கும் கடன்பெறுவோர் வங்கி வசதிகளைப் பெறுவதற்கும் சந்தைப்படுத்தல்போன்ற துணைபுரியும் பணிகள் என்பன கிடைத்தற்கும் அதன்மூலம்செயற்றிட்டங்களை வெற்றிகரமாக செயல்முறைப்படுத்துவதற்கும் உதவியளிக்கப்படுகிறது. முடிவில் கடன்கள் பயன்பாடுகளை முடிவுறும் தறுவாயில் மேற்பார்வையிடுதலும், கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான உறுதிப்படுத்தலும்கூட வர்த்தக வங்கிகளின் உதவியுடன் பிரதேச அலுவலகத்தினுல் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த மாவட்டத்தில் உள்ள தொழில் வாய்ப்புக்களற்ற இளைஞர்களின் மத்தியில் சுய தொழில் வாய்ப்பு நடவடிக்கைககளை ஊக்குவிப்பதற்காகவே சுய வேலை வாய்ப்புத் திட்டங்களுக்கான மீள் நிதியிடல் உதவிகள் திட்டமிடப்பட்டன. 1983ஆம் ஆண்டின் இறுதியின்படி இத்திட்டத்தின் கீழ் பிரதேச அலுவலகமானது வர்த்தக வங்கிகளுக்கு 460 செயற்றிட்டங்களுக்கு விதந்துரைப்புக்களை வழங்கியதுடன் அவற்றில் 268 செயற்றிட்டங்கள் மொத்தம் ரூ. 1,186,130 பெறுமதியான கடன் மூலம் நிதியிடுவதற்கு ஒப்புதல் வழங்கியது. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் விதந்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களில் நாலில் ஒரு பங்கு கோழிப்பண்ணை, பாற்பண்ணை உட்பட்ட விவசாயத்துறையிலிருந்த வேளையில் பெரும்பான்மையானவை செங்கல் செய்தல், தும்பு உற்பத்திகள், இனிப்புப் பண்டங்கள், ஆடை உற்பத்திகள் போன்ற வேளாண்மை அல்லாத நடவடிக்கைகளைக் கொண்டிருந்தன.

கிராம ஏற்புத் திட்டங்களின் கீழான மீள் நிதியிடல் பகுதி அணுகுமுறை என்ற பயன்பாட்டில் கிராமிய வருவாய், தொழில் நிலை உருவாக்கம் போன்றவற்றை ஊக்குவீப்பதை நோக்கல் ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திக் கொடுகடன் வசதியளிக்கும் குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டதாகும். 1983இன் இறுதியின்படி இத்திட்டத்தின்கீழ் வங்கிகளினுல் ஐந்து கிராமங்கள் ஏற்கப்பட்டன. பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ஒப்பீட்டு

ரீதியில் சிறியதாக இருந்தபோதிலும் இத்திட்டத்தின் செயல்விளைவாக வேளாண்மையாளர்களையும், கிராமத்தவர்களையும் ஒழுங்குபடுத்துதல் கிராமத்தவர்களைப் பயிற்றுவித்தலும் கிராமத்தவர்களுக்கும், வங்கியாளர்களுக்கும் இடையிலான தொடர்புகளை அபிவிருத்தி செய்தல் என்பன மிகவும் குறிப்பிடத்தக்கனவாக இருந்தன.

மீளாய்வுக்கான ஆண்டில் இரண்டு அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் மாத்தறை பிரதேச அலுவலகத்தினால் விதந்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கு செயல்திறனுடன் நிதியிடுவதிலீடுபட்டன. அட்டவணை 2.8இல் சுய தொழில்வாய்ப்புத் திட்டம் கிராமிய ஏற்புத் திட்டம் என்பனவற்றின் கீழான செயற்றிட்டங்களில் முன்னேற்றங்களின் ஒரு ஒன்ருக்கப்பட்ட அறிக்கையைக் காட்டுகின்றது. சுயதொழில்வாய்ப்புத் திட்டத்தின் கீழும் கிராமிய ஏற்புத் திட்டத்தின் கீழும் விதந்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 503 ஆக விளங்கியது. இந்த எண்ணிக்கையில் 297 செயற்றிட்டங்கள் வங்கிகளினால் நிதியிடப்பட்டு ரூ. 1,281,115 தொகையினை ஈடுபடுத்தியுள்ளது. 1983 திசெம்பர் முடிவில் இச் செயற்றிட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கையின் மொத்தம் 523 ஆக இருந்தது.

விதந்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கான கடன்களின் பயன்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட ஆக்க பூர்வமான முயற்சிகளின் விளைவாக 1983 டிசம்பர் முடிவில் பயன்பாட்டுக் காலம் முடிவடைந்ததால் செயற்றிட்டத்தில் மீள் கொடுப்பனவு நிலை 78 சதவீதமாகப் பிரதிபலித்தது. இக்காலப்பகுதியில் பல கடன்களும் முழுமையாக மீளப் பெறப்பட்ட வேளையில் சிலர் நிதி உதவியிலும் சிலர் தமது செயற்றிட்டங்களுக்கு உயர்ந்த நிதி உதவிகளைப் பெறுவதற்கு விதந்துரைக்கப்பட்டனர். அட்டவணை 2.9 மூலதனத்தை மீளக் கொடுப்பனவு செய்வதில் காணப்பட்ட முன்னேற்றங்களையும் கடன்களின் திருப்திகரமான மீள் பெறுகை நிலையினையும் காட்டுகின்றது.

பிரதேச அலுவலகமான கிராமிய பொருளாதார நடவடிக்கைகளை செயல் விரைவுபடுத்த ஒரு புதிய செயல்முறைத் திட்டத்தினைப் புகுத்தி வங்கி நிதியைப் பெறுவதன் அடிப்படையில் கிராமிய மக்களின் இணைந்த கூட்டுறவு பழக்க வழக்கங்களை ஏற்படுத்தலாம். மீளாய்வின் கீழான ஆண்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட பல்வேறு தொகுதிகளைக்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளில் வீட்டுத் தோட்டம் விலங்கும் கால்நடையும், சிறிய கைத்தொழில்களும் ஆகியன அடங்கியுள்ளன. இப்பகுதியில் இந்த முயற்சிக்கு பல்வேறு தொண்டாற்றும் அரசு சார் பற்ற நிறுவனங்களும் உதவியளித்தன. இதற்கு மேலாக, இந்த நடவடிக்கைகளிற் சில அம்பாந்தோட்டை மொனருகல மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டன.

மத்திய வங்கியின் மீள் நிதியிடல் திட்டத்தின் கீழ் நெற்செய்கைக் கடன்கள் விரைவான இசைவளிப்பையும் பகிர்ந்தளிப்பையும் பெறும் பொருட்டு அறிமுகம் செய்யப்பட்ட கொடுகடன் வேலைத்தளம் முழு வெற்றியை நிரூபித்துக்காட்டியது. பிரதேச அலுவலகமானது மாத்தறை மாவட்டத்தில் மாதிரி"யாயா" நெல் பயிர்ச் செய்கைக் கடன்திட்டம் (மாநெபகதி) ஒன்றைத் தோற்றுவித்து ஒழுங்குபடுத்தப்பட்ட வேளாண்மையாளர்கள் தனியான வேளாண்மையாளர்களைவிட யாயா என்ற பயிர்ச்செய்கை அலகினை உபயோகிக்கும் தன்மையை ஏற்படுத்தியது. இத் திட்டமானது வேளாண்மை செய்முறைப் பயிர்கள் நெகிழ்ச்சியுடைய வங்கித் தொழில் வழிமுறைகளை மேற்கொள்ளுதல் பண்ணை நலப்பணி மனைகள் மூலம்

அட்டவணை 2.8

**சுய தொழில் வாய்ப்பு, கிராம ஏற்பு ஆகிய திட்டங்களின்கீழ், மாத்தறை பிரதேச அலுவலத்தினல் விதந்துரைக்கப்பட்ட செயற் திட்டங்களின் முன்னேற்றம், 1983 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு**

| துறை | சுய வாய்ப்புத் தொழில் திட்டம் — விதந்துரைக்கப் பட்டவற்றின் மொத்தம் எண்ணிக்கை | சுய வாய்ப்புத் தொழில் திட்டம் — விதந்துரைக்கப் பட்டவற்றின் மொத்தம் தொகை ரூ. | சுய வாய்ப்புத் தொழில் திட்டம் — ஒப்புதலளிக்கப்பட்டவற்றின் மொத்தம் எண்ணிக்கை | சுய வாய்ப்புத் தொழில் திட்டம் — ஒப்புதலளிக்கப்பட்டவற்றின் மொத்தம் தொகை ரூ. | கிராம ஏற்புத் திட்டம் — விதந்துரைக்கப் பட்டவற்றின் மொத்தம் எண்ணிக்கை | கிராம ஏற்புத் திட்டம் — விதந்துரைக்கப் பட்டவற்றின் மொத்தம் தொகை ரூ. | கிராம ஏற்புத் திட்டம் — ஒப்புதலளிக்கப்பட்டவற்றின் மொத்தம் எண்ணிக்கை | கிராம ஏற்புத் திட்டம் — ஒப்புதலளிக்கப்பட்டவற்றின் மொத்தம் தொகை ரூ. | முழு மொத்தம் — விதந்துரைக்கப்பட்டவற்றின் மொத்தம் எண்ணிக்கை | முழு மொத்தம் — விதந்துரைக்கப்பட்டவற்றின் மொத்தம் தொகை ரூ. | முழு மொத்தம் — ஒப்புதலளிக்கப்பட்டவற்றின் மொத்தம் எண்ணிக்கை | முழு மொத்தம் — ஒப்புதலளிக்கப்பட்டவற்றின் மொத்தம் தொகை ரூ. | மதிப்பிடப்பட்ட தொழில் வாய்ப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை** | | | | | | | | | | | | | |
| 1. வேளாண்மை .. | 18 | 65,865 | 7 | 26,285 | 3 | 5,000 | — | — | 21 | 70,865 | 7 | 26,285 | 10 |
| 2. பாற்பண்ணை ... | 28 | 123,700 | 9 | 42,500 | 4 | 19,800 | 3 | 14,400 | 32 | 143,500 | 12 | 56,900 | 12 |
| 3. கோழிப்பண்ணை ... | 79 | 418,800 | 41 | 214,200 | 2 | 20,000 | 2 | 20,000 | 81 | 438,800 | 43 | 234,200 | 43 |
| 4. ஆட்டுப்பண்ணை ... | 2 | 6,000 | — | — | 5 | 11,500 | 5 | 11,500 | 7 | 17,500 | 5 | 11,500 | 5 |
| 5. கடற்றொழில் ... | 4 | 18,450 | 3 | 11,000 | — | — | — | — | 4 | 18,450 | 3 | 11,000 | 3 |
| **கைத்தொழில்கள்** | | | | | | | | | | | | | |
| 6. அப்பமணையும், மிட்டாய்த் தொழிற்சாலையும் ... | 27 | 108,620 | 17 | 71,140 | 2 | 7,125 | 1 | 5,000 | 29 | 115,745 | 18 | 76,140 | 36 |
| 7. ஏனைய உணவு உற்பத்திகள் .. | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 8. புகையிலை / பீடி ... | 6 | 28,785 | 3 | 16,200 | — | — | — | — | 6 | 28,785 | 3 | 16,200 | 10 |
| 9. கைத்தறி நெசவு ... | 11 | 40,550 | 8 | 30,050 | 4 | 12,500 | 3 | 7,500 | 15 | 53,050 | 11 | 37,550 | 27 |
| 10. தையல் ... | 39 | 159,915 | 31 | 126,515 | — | — | — | — | 39 | 159,915 | 31 | 126,515 | 58 |
| 11. ஏனைய புடவை உற்பத்திகள் ... | 14 | 52,570 | 9 | 36,370 | — | — | — | — | 14 | 52,570 | 9 | 36,370 | 21 |
| 12. தச்சுத் தொழில் ... | 25 | 93,570 | 12 | 50,220 | — | — | — | — | 25 | 93,570 | 12 | 50,220 | 18 |
| 13. தாள் உற்பத்திகள் ... | 5 | 23,890 | 1 | 4,090 | — | — | — | — | 5 | 23,890 | 1 | 4,090 | 2 |
| 14. உலோகமல்லாக் கனிப்பொருட்கள் | 78 | 306,555 | 46 | 180,825 | 5 | 18.575 | — | — | 83 | 325,130 | 46 | 180,825 | 135 |
| 15. கல்லுடைத்தல் ... | 9 | 36,215 | 5 | 21,500 | 2 | 5,471 | 2 | 5,250 | 11 | 41,686 | 7 | 26,750 | 19 |
| 16. உலோக உற்பத்திகள் ... | 10 | 46,200 | 9 | 41,200 | — | — | — | — | 10 | 46,200 | 9 | 41,200 | 26 |
| 17. கயிற்று உற்பத்திகள் ... | 31 | 80,480 | 21 | 55,260 | 9 | 17,710 | 8 | 15,915 | 40 | 98,190 | 29 | 71,175 | 35 |
| 18. திருத்தலும் பேணலும் ... | 28 | 119,675 | 14 | 58,195 | — | — | — | — | 28 | 119,675 | 14 | 58,195 | 19 |
| 19. ஏனையவை .. | 23 | 92,815 | 15 | 62,630 | 4 | 16,120 | 2 | 6,120 | 27 | 108,935 | 17 | 68,750 | 23 |
| 20. பண்ணைக் கருவிகள் .. | 3 | 83,750 | 3 | 83,750 | 3 | 9,300 | 3 | 9,300 | 6 | 93,050 | 6 | 93,050 | 7 |
| 21. இரசாயனப் பொருட்கள் ... | 6 | 24,800 | 5 | 20,800 | — | — | — | — | 6 | 24,800 | 5 | 20,800 | 5 |
| 22. வர்த்தகமும், வணிகமும் ... | 14 | 54,400 | 9 | 33,400 | — | — | — | — | 14 | 54,400 | 9 | 33,400 | 9 |
| மொத்தம் ... | 460 | 1,985.605 | 268 | 1,186.130 | 43 | 143,101 | 29 | 94,985 | 503 | 2,128,706 | 297 | 1,281,115 | 523 |

மூலங்கள்: மாத்தறை பிரதேச அலுவலகம், இலங்கை மத்திய வங்கி.

தொழில்நுட்பப் பணிகள் சிறந்த கடன் பகிர்ந்தளிப்புகளையும் மீளப்பெறுகைகளை யும் எதிர்நோக்கியது. 1983 சிறுபோகம், 1983—84 பெரும் போகங்களில் ரூ. 304,940 கடன்கள் இந்த மாவட்டத்தில் உள்ள 460 ஏக்கர்களை உள்ளடக்கிய 6 கிராமங்களிலுள்ள 260 வேளாண்மையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி பிரதேச அலுவலகத்துடன் கலந்தாலோசனைசெய்து கோழிப் பண்ணை நடாத்துதல் தெங்குப் பயிர்ச்செய்கை தேயிலை மீள் பயிரிடல், கரும்பு, மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வசதிகள் கிடைக்கக்கூடியதாயிருந் தால் 2 சில்லு இழுபொறிக் கொள்வனவுகள் போன்ற நடவடிக்கைகளுக்காக பல பிரதேச கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அதேவகையில் மக்கள் வங்கி யும் இலங்கை வங்கியும் ஒரு பிரதேசக் கடன் திட்டத்தை செயல்முறைப்படுத்தி மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வசதி கிடைக்கப்பெற்றதினுல் தேயிலை சிறு உடை மையாளருக்கு வளமாக்கிக் கொள்வனவு செய்வதன் பொருட்டு நிதி உதவியை அளித்தது.

மாத்தறை பிரதேச அலுவலகம் தொடர்ந்தும் பிரதேச தீர்ப்பனவு நிலை யத்தை வழிநடத்தி, இருநாளாந்த தீர்ப்பனவுகளை இப்பகுதியிலுள்ள நான்கு வர்த்தக வங்கிகளுடன் நடைமுறைப்படுத்தியது. 1983ஆம் ஆண்டு காலத்தில் தீர்ப்பனவு நடைமுறைகள் ரூ. 8,210 இலட்சங்களுக்கு வகைகூறியது.

அட்டவணை 2.9

இலங்கை மத்திய வங்கி — மாத்தறை

1983 திசெம்பர் இறுதியில் மீள் கொடுப்பனவு நிலை

| | மூலதன மீள் கொடுப்பனவு | | | மேலதிகமாக வரவேண்டிய கடன்கள் |
|---|---|---|---|---|
| | வழங்கப்பட்ட கடன்களின் தொகை | வரவேண்டிய கடன் | கிடைத்த கடன்கள் | |
| **வேளாண்மை** | | | | |
| 1. வேளாண்மை ... | 20,800 | 7,060 | 6,352 | 708 |
| 2. பாற்பண்ணை ... | 20,400 | 4,080 | 2,880 | 1,200 |
| 3. கோழிப்பண்ணை ... | 122,315 | 40,301 | 29,019 | 11,282 |
| 4. ஆட்டுப்பண்ணை ... | — | — | — | — |
| 5. கடற்றொழில் ... | 3,000 | 2,850 | 1,350 | 1,500 |
| **கைத்தொழில்** | | | | |
| 6. அப்பமனையும், மிட்டாய்த் தொழிற்சாலையும் ... | 44,349 | 28,662 | 22,334 | 6,328 |
| 7. ஏனைய உணவு உற்பத்திகள் ... | — | — | — | — |
| 8. புகையிலை/பீடி ... | 16,200 | 10,192 | 3,260 | 6,932 |
| 9. கைத்தறி நெசவு ... | 25,300 | 9,393 | 7,308 | 2,085 |
| 10. தையல் ... | 98,115 | 54,161 | 41,823 | 12,338 |
| 11. ஏனைய புடவை உற்பத்திகள் ... | 29,070 | 17,886 | 13,691 | 4,195 |
| 12. தச்சுத் தொழில் ... | 48,220 | 19,729 | 17,902 | 1,827 |
| 13. தாள் உற்பத்திகள் ... | 4,090 | 2,622 | 2,394 | 228 |
| 14. உலோகமல்லா உற்பத்திகள் ... | 140,900 | 96,018 | 75,757 | 20,261 |
| 15. கல்லுடைத்தல் ... | 25,250 | 12,795 | 11,595 | 1,200 |
| 16. உலோக உற்பத்திகள் .. | 26,300 | 12,345 | 10,115 | 2,230 |
| 17. கயிற்று உற்பத்திகள் ... | 57,235 | 26,392 | 22,691 | 3,701 |
| 18. திருத்தலும் பேணலும் ... | 40,100 | 21,320 | 17,005 | 4,315 |
| 19. ஏனையவை ... | 43,150 | 22,319 | 17,244 | 5,075 |
| 20. பண்ணைக் கருவிகள் . | 90,750 | 10,450 | 10,273 | 177 |
| 21. இரசாயனப் பொருட்கள் . | 15,800 | 7,255 | 4,215 | 3,040 |
| 22. வர்த்தகமும் வணிகமும் . | 7,400 | 3,764 | 3,008 | 756 |
| மொத்தம் .. | 878,744 | 409,594 | 320,216 | 89,378 |

## பிரதேச அலுவலகம் - அநுராதபுரம்

அநுராதபுரம் பிரதேச அலுவலகம் இரண்டாவது ஆண்டுத் தொழிற்பாட்டிலுள்ளது. அநுராதபுரம் நாட்டின் மிகப்பெரிய நிருவாக மாவட்டமாக இருப்பதுடன். பிரதேச அலுவலகத்தின் நடவடிக்கைகள் இன்னும் இந்த மாவட்டத்திற்குள்ளேயே வரையறுக்கப்பட்டிருக்கிறது, அண்மைய மாவட்டங்களான பொலநறுவை, திருகோணமலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் உள்ள வர்த்தக வங்கிகளிடமிருந்தும், ஏனைய முகவர்களிடம் இருந்தும் மத்திய வங்கிப் பணிகளுக்கு மிகுந்த கேள்வி இருப்பதன் காரணத்தினுல் குறைந்தது ஒரு சில மாவட்டங்களுக்காவது பிரதேச அலுவலகம், தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் இம்மாவட்டத்தில் அபிவிருத்தி மேற்பார்வை வேளாண்மைக் கடன் வழங்கல்களுக்கு மேலதிகமாக மீளாய்வின் கீழான ஆண்டில் பிரதேச அலுவலகத்தின் மீள் நிதியிடல் கடன் திட்டத்தின் வேலைகளும் தொடர்ந்தன. இந்தத் திட்டமானது 1982ஆம் ஆண்டில் வங்கிகள் இல்லாத பகுதிகளில் உள்ள சிறிய அளவுச் செயற்றிட்டங்களுக்கு அபிவிருத்தி நிதியினை ஊக்குவிப்பதன் நிமித்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது வங்கியாளர்களுக்கும், கிராமிய மக்களுக்கும், அரசமுகவர்களுக்கும் இடையில் நெருக்கமான ஒரு ஊன்றுகோலினை வழங்கியதுடன், நீண்ட காலத்தவணையில் கிராமியத்துறையில் வங்கித்தொழில் வசதிகளை விரிவுபடுத்துவதற்கும் வழிவகுக்கும். இத்திட்டத்தின் செயல் எல்லையில் பெரிதுபடுத்தும் வகையில் தொடங்கப்பட்ட ஆண்டில் 6 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே வரையறுக்கப்பட்ட தொழிற்பாடுகள் எல்லா மாவட்டத்தையும் உள்ளடக்கும்வகையில் 20 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் வருங்காலத்தினை எதிர்நோக்கியுள்ள கடன்பட்டோர் குழுக்கூட்டத் தொடர்கள் தனிப்பட்ட கலந்துரையாடல்கள், செயற்றிட்டப்பகுதிகளுக்கான நேரடி விஜயம் போன்றவை மூலம் அடையாளம் காணப்படும். உதவி அரச அதிபர்களினது தொண்டர் மற்றும் அரச முகவர்கள் போன்ருேர் கிராமிய அபிவிருத்தியில் பங்குகொண்டு மட்டப்படுத்தும் அலுவலர்களை இந்தக் கவனமான பணிக்கு ஈடுபடுத்தினர்.

செயற்றிட்டங்கள் தெரிவுசெய்வதில் சிறு போககாலத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளின் தரைக்குக்கீழ் உள்ள நீரை மேலே எடுக்கும் நீர்ப்பாசன மூல வளங்கள் மூலம் பயன்படுத்துதல் போன்ற வேளாண்மைச் செயற்றிட்டங்களுக்குக் கூடிய முன்னுரிமை வழங்கப்பட்டன. வீட்டுவிலங்குகள் வளர்ப்புக்கான செயற்றிட்டம்கூட ஒரு முக்கிய இடத்தைப் பெற்றது. மொத்த செயற்றிட்டங்களில் 83 சதவீதமாக வேளாண்மை, வீட்டு விலங்கு அபிவிருத்தி என சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. வருங்காலத்தை எதிர்நோக்கியுள்ள கடன்பட்டோர்க்கு தத்தமது உரித்தான துறைகளில் பயிற்சி அளிக்கப்படும்.

1983 திசெம்பர் முடிவின்படி இத்திட்டத்தின் கீழ் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நாசனல் வங்கி, இந்தியன் அரசவங்கி ஆகியவை ரூ. 35 இலட்சம் கொடுகடன் வழங்கல்களுடன் விதந்துரைக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 637 ஆகும். விபரங்கள் அட்டவணை 2.10 இல் காட்டப்பட்டுள்ளன.

1983 டிசெம்பர் முடிவில் இலங்கை வங்கி, மக்கள் வங்கிக் கிளைகள் ரூ. 10 இலட்சம் பெறுமதியான 186 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தன. ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தத் தொகையில் மீளாய்வின் கீழான ஆண்டில் 128 செயற்றிட்டங்களில் ரூ. 724,125 செயற்றிட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

நிதியிடப்பட்ட அலகுகளின் நிலையான முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு பிரதேச அலுவலகமானது பயிற்சி வசதிகளுக்கு மேலதிகமாக விரிவாக்க வசதிகள் தொடர்ச்சியான வழிமுறைகள் தொழிற்பாட்டு முகாமைத்துவ மட்டங்களில் அறிவுரை என்பன வழங்கப்பட்டன.

இவ்வாண்டுக்காலத்தில் தொடங்கப்பட்ட செயற்றிட்டங்களில் 91 பேருக்கு புதிய தொழில் வாய்ப்புக்களை வழங்கியதுடன், 78 பேருக்கு முழுமையான தொழிலினை உறுதிப்படுத்தியது. தொடங்கப்பட்ட மொத்த செயற்றிட்டங்களின் மொத்தப் பெறுமதி ரூ. 53 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நிதியிடப்பட்ட மொத்த செயற்றிட்டங்களில் 62 செயற்றிட்டங்கள் வங்கிகளுக்கு கடன் தவணைப்பணத்தை திருப்பிச் செலுத்தத் தொடங்கியுள்ளன. வங்கிக்கு வரவேண்டிய ஏறக்குறைய 87 சதவீதமான மொத்தக் கடன் தொகை கடன்பட்டோரினால் வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டது.

நீண்ட தவணை, நடுத்தர தவணை செயற்றிட்டங்களுக்கான நிதியிடலுக்கு மேலதிகமாக கொரவப்பொத்தான உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான கலகிதியகம என்னும் கிராமத்தில் ஒரு பயிர்ச்செய்கை செயல்முறைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செயற்றிட்டத்திற்கு இலங்கை வங்கியின் கொரவப்பொத்தானக் கிளையினால் ரூ. 74,440 பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிர்ச்செய்கைச் செயல்முறைத் திட்டமானது எதிர்காலத்தில் நிதியிடப்படும் செயல்முறைத் திட்டத்துடன் ஒரு நீண்ட தவணை ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்திச் செய்முறைத்திட்டத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் பிரதேச அலுவலகமானது மீளாய்வின் கீழான ஆண்டில் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் பரிசீலனையில் உள்ள பகுதிகளில் சிறிய நடுத்தர கைத்தொழிற் செயற்றிட்டங்களில் நுகர்வோர் விலைகள் சேகரிப்பு நாடளாவிய தரவுச் சேகரிப்புத் திட்டத்தின்கீழான உற்பத்தியாளர் விலைகள் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தின. பிரதேச அலுவலகமானது தரவுச் சேகரிப்பாளர்களின் வேலைகளினை மேற்பார்வை செய்யும் வேளையில் தொடர்ந்த அடிப்படையில் நுகர்வோர் பொருட்களில் சில்லறை விலைகளின் சுயாதீன தரவுகளையும் முக்கிய வேளாண்மை உற்பத்திகளில் உற்பத்தியாளர் விலைகளையும் சேகரிக்கின்றது. இதே வேளையில் ஏனைய முக்கிய நடவடிக்கைகளான உப உணவுப் பயிர்கள் நகரத்தின் சுற்றுலா வருகைகள் என்பன போன்ற பொருளியற் தரவுச் சேகரிப்புக்களையும் இந்தப் பிரதேசத்தில் சிறிய அளவிலான கைத்தொழிற் செயற்றிட்டங்களிலான தரவுகள் சேகரிப்புக்களும் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

**கிராம ஏற்பும், சுய தொழில் வாய்ப்புத் திட்டமும் —**

| வகை | | வங்கிகளுக்கு அளிக் கப்பட்ட செயற் திட்டங்களின் எண்ணிக்கை | | வங்கிகளினல் ஒப்பு தலளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | அலகு களின் எண் ணிக்கை | பெறுமதி | அலகு களின் எண் ணிக்கை | பெறுமதி |
| **1. நீண்டகால நீர்ப்பாசன வசதிகளுடனுன வேளாண்மை** | | | | | |
| 1.1 | கிணறுகளும், நீர் இறைக்கும் பம்பிகளும் ... | 160 | 1330.6 | 45 | 389.5 |
| 1.2 | வாழைப் பயிர்ச்செய்கை ... | 02 | 9.8 | 01 | 3.5 |
| 1.3 | நீர் இறைக்கும் காற்றுடி ... | 05 | 67.3 | — | — |
| **2. கால்நடை** | | | | | |
| 2.1 | கோழிப் பண்ணை ... | 77 | 474.1 | 25 | 149.6 |
| 2.2 | பாற்பண்ணை ... | 89 | 480.6 | 16 | 81.8 |
| 2.3 | ஆட்டுப்பண்ணை ... | 124 | 430.4 | 30 | 104.2 |
| 2.4 | பன்றிப் பண்ணை ... | 76 | 239.7 | 17 | 65.9 |
| **3. கைத்தொழில்** | | | | | |
| 3.1 | செங்கல் தயாரிப்புகள் ... | 11 | 46.3 | 05 | 22.8 |
| 3.2 | அப்பமனையும், இனிப்புவகையும் ... | 21 | 103.0 | 15 | 70.9 |
| 3.3 | கொல்லவேலை, தகரவேலை இழுபொறி பேணல், அலகுகள் ... | 11 | 60.8 | 02 | 8.1 |
| 3.4 | தச்சுவேலையும், மரம் செதுக்குதலும் ... | 13 | 81.0 | 08 | 45.1 |
| 3.5 | பீடியும் சுருட்டுத் தயாரிப்பும் ... | 02 | 8.9 | 02 | 8.9 |
| 3.6 | ஆடைகளும், பட்டிக்கும் ... | 07 | 31.5 | 04 | 15.5 |
| 3.7 | கயிற்று உற்பத்திகள் ... | 05 | 20.0 | 02 | 7.8 |
| 3.8 | சவர்க்காரம், கடித உறைகள் தயாரித்தல் ... | 02 | 9.3 | 01 | 5.5 |
| 3.9 | ஆயுர்வேத மருந்துத் தயாரிப்புகள் ... | 01 | 3.0 | — | — |
| **4. பணிகள்** | | | | | |
| 4.1 | வர்த்தகம், வீட்டுப் பயன்பாட்டுக்குத் தேவையான பொருட்களும் பலசரக்குகளும் உறைகளில் அடைத்தல் .. | 08 | 30.0 | 03 | 8.0 |
| 4.2 | ஈருருளிகள் திருத்தல் பிரிவுகள் ... | 13 | 48.5 | 07 | 25.5 |
| 4.3 | நிழற்படமெடுத்தல் ... | 02 | 15.0 | 01 | 8.5 |
| 4.4 | சிகையலங்காரம் ... | 04 | 9.9 | 01 | 3.0 |
| 4.5 | மின்னியக்க வேலை ... | 01 | 10.0 | — | — |
| 4.6 | மின்கலத்திற்கான மின்னூட்டல் அலகுகள் ... | 01 | 4.0 | 01 | 4.0 |
| 4.7 | போக்குவரத்து பிரிவுகள் ... | 01 | 2.0 | — | — |
| 4.8 | விளம்பர அட்டைகள் தயாரித்தல் ... | 01 | 5.0 | — | — |
| **மொத்தம்** | ... | 637 | 3,521.3 | 186 | 1,028.1 |

அட்டவணை 2.10

**1983 திசெம்பர் இறுதியில் உள்ள நிலை**

(பெறுமதி ஆயிரம் ரூபாய்களில்)

| நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களும் ஈடுபடுத்தப்பட்ட மூலதனமும் | | | | மொத்த மதிப்பிடப்பட்ட விளைவு | மீள் கொடுப்பனவுகள் | | | மேலதிகமாக வர வேண்டிய கடன்களின் மொத்தத் தொகை | தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ரூபாய்களில் | | | | திரும்பி வரவேண்டியகடன் அலகுகளின் எண்ணிக்கை | வரவேண்டிய மொத்த தொகை திசெம்பர் இறுதியில் | திருப்பிச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையின் பெறுமதி திசெம்பா இறுதியில் | | |
| அலகுகளின் எண்ணிகை | வங்கிக் கடன் | கடன் பட்டோர் உதவு தொகை | மொத்தம் | | | | | | |
| 37 | 314.7 | 76.1 | 390.8 | 1,225.0 | 06 | 2.9 | 2.1 | 0.8 | 48 |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| 18 | 96.0 | 32.1 | 128.1 | 413.9 | 09 | 5.1 | 2.9 | 2.2 | 18 |
| 01 | 5.4 | 0.9 | 6.4 | — | — | — | — | — | 01 |
| 14 | 49.3 | 7.0 | 56.3 | — | 01 | 0.7 | 0.7 | — | 14 |
| 11 | 46.3 | 16.0 | 62.3 | — | — | — | — | — | 11 |
| 02 | 9.5 | 1.6 | 11.1 | 116.2 | 02 | 2.6 | 2.0 | 0.6 | 04 |
| 15 | 70.9 | 31.4 | 102.3 | 2,150.5 | 15 | 25.0 | 22.4 | 2.6 | 26 |
| 02 | 8.1 | 2.4 | 10.5 | 135.1 | 02 | 3.2 | 3.2 | — | 03 |
| 07 | 40.2 | 15.0 | 55.2 | 481.7 | 06 | 10.5 | 8.9 | 1.6 | 08 |
| 02 | 8.9 | 2.1 | 11.0 | 124.9 | 02 | 2.9 | 2.6 | 0.4 | 12 |
| 04 | 15.5 | 6.6 | 22.1 | 171.2 | 04 | 6.1 | 5.8 | 0.3 | 05 |
| 02 | 7.8 | 0.9 | 8.7 | 90.0 | 02 | 3.4 | 3.1 | 0.4 | 03 |
| 01 | 5.5 | 1.2 | 6.7 | 80.6 | 01 | 2.5 | 2.5 | — | 02 |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| 03 | 8.0 | 1.4 | 9.4 | 79.8 | 03 | 3.0 | 2.8 | 0.2 | 03 |
| 06 | 22.5 | 10.8 | 33.3 | 163.9 | 06 | 3.7 | 3.4 | 0.2 | 06 |
| 01 | 8.5 | 5.0 | 13.5 | 57.6 | 01 | 2.5 | 2.5 | — | 02 |
| 01 | 3.0 | 1.6 | 4.6 | 24.0 | 01 | 1.9 | 1.5 | 0.4 | 02 |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| 01 | 4.0 | 1.0 | 5.0 | 7.2 | 01 | 0.9 | 0.9 | — | 01 |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| 128 | 724.1 | 213.0 | 937.2 | 5,321.6 | 62 | 77.1 | 67.5 | 9.6 | 169 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இப்பகுதியிலுள்ள சிறிய நடுத்தர கைத்தொழில் செயற்றிட்டங்களின்மீதான மேற்பார்வை பிரதேச அலுவலகத்திற்கு இப்பொழுது நம்பிக்கையூட்டி உள்ள துடன் மீளாய்வின் கீழான ஆண்டில் 13 அத்தகைய செயற்றிட்டங்கள் மேற் பார்வை செய்யப்பட்டன. சிறிய நடுத்தர கைத்தொழிற் செயற்றிட்டங்களின் மேற்பார்வையானது பிரச்சினைகளை அடையாளம் காணவும் நிலையான முன்னேற் றத்தையும், கடன் தவணைப்பணங்களின் மீள் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்த வும் தொடர்ச்சியான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

பிரதேச அலுவலகத்தின் தீர்ப்பனவு நிலையம் இரு நாளாந்த தீர்ப்பனவு களுடன் தமது தொழிற்பாட்டினைத் தொடர்ந்தது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, அட்டன் நெசனல் வங்கி, இந்திய அரச வங்கி என்பன இந்தத் தீர்ப் பனவு நிலையத்தினை ஒழுங்காகப் பயன்படுத்தின.

## செலாவணிக் கட்டுப்பாடு

செலாவணிக் கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதில் அரசின் முகவராக வங்கி தொடர்ந்தும் தொழிற்பட்டது. மீளாய்வின் கீழான ஆண்டில் நடை முறைக்கு வந்த செலாவணிக் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் முக்கிய மாற் றங்கள் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**1. கப்பற்றுறை, விமானத்துறை வெளிநாட்டுக் கணக்குகள்**

1983 சனவரி 1இல் இருந்து பயணங்கள், சரக்குக் கட்டணச் சேகரிப்புகளை வெளிநாட்டு விமானத்துறை கணக்குகளில் வரவு வைப்பதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் ஒப்புதல் அவசியம் என்று அறிவிக்கப்பட்டது.

**2. ஏற்றுமதிகள்**

(i) 1983 பெப்புருவரி 1 முதல் கராம்பு கீழ்மட்ட விலைத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டது.

(ii) 1983 மே 31 முதல் கறுவாச்சுருள்கள், சுருளாக்கல் ஆகியவற்றின் ஏற்றுமதிகளுக்கு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரினால் வழங் கப்பட்ட ஏற்றுமதி உரிமத்தை பெற்றுக்கொள்ளுதல் அவசியம் என அறிவிக்கப்பட்டது.

(iii) 1983 செத்தெம்பர் 16இலிருந்து கறுவாவின் கீழ்மட்ட விலைத்திட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

**3. கல்வி**

வெளிநாடுகளில் கல்வியை மேற்கொள்ளும் இலங்கையர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படிகளைப் பூர்த்தி செய்வதற்கான செலாவணி அதிகரிப்பு கீழே காட்டப் பட்டுள்ள நடைமுறையில் அனுமதிக்கப்பட்டது.

| நாடு | | வாழ்க்கைச் செலவும் படியும் | |
|---|---|---|---|
| | | பட்டதாரி மாணவரும் தொழில் நுட்பக் கல்வியும் | பட்டப்பின் படிப்பு |
| அ. | வங்காளதேசம், பர்மா, மாலைதீவு, நேபாளம், பாகித்தான் | இந்திய ரூ. 7,200 (ஆண்டொன்றுக்கு) | இந்திய ரூ. 9,600 (ஆண்டொன்றுக்கு) |
| ஆ. | ஐ. இ., ஐ. சோ. ச. குடியரசு உட்பட ஐரோப்பா | 2,400 ஸ்டேர்லிங் பவண் (ஆண்டொன்றுக்கு) | 3,000 ஸ்டேர்லிங் பவுண் (ஆண்டொன்றுக்கு) |
| இ. | அவுத்திரேலியா, கனடா, யப்பான் நியுசிலாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள் | 6,000 ஐ. அ. டொலர்கள் (ஆண்டொன்றுக்கு) | 7,200 ஐ. அ. டொலர்கள் (ஆண்டொன்றுக்கு) |
| ஈ. | ஏனைய எல்லா நாடுகளும் | 3,600 ஐ. அ. டொலர்கள் (ஆண்டொன்றுக்கு) | 4,800 ஐ. அ. டொலர்கள் (ஆண்டொன்றுக்கு) |

அதேபோல், உடைகளுக்கான படிகள் 75 ஸ்டேர்லிங் பவுணில் இருந்து 150 ஸ்டேர்லிங் பவுணுக அதிகரிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்பட்டது.

4. இந்தியாவுக்கு குடிபெயர்ந்து செல்வோர்

இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து செல்லத் திட்டமிட்டுள்ளவர்களுக்கு வழங்கப் படும் செலாவணிப் படிகள் வயதுவந்தோருக்கு ரூ. 50 இலங்கை நாணயத்தில் இருந்து ரூ. 100 இலங்கை நாணயத்திற்கும், 12 வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கு ரூ. 25 இலங்கை நாணயத்திலிருந்து ரூ. 50 இலங்கை நாணயத்திற்கும் என அதிகரிக்கப்பட்டது.

5. பயணத்தர் காசோலைகளை பணமாக மாற்றல்

ஏதாவது ஒரு நாளில் ஒரு நபரினுல் பயணத்தர் காசோலைகள் பணமாக மாற்றுவதற்கான மேலெல்லை ரூ. 100,000 க்குச் சமமானதாக வரையறுக்கப் பட்டுள்ளது.

6. இறக்குமதிகள்

(i) கோப்பி இறக்குமதி செய்வதற்கான கொடுகடன் பத்திரங்களை ஏற்றுக் கொள்வதற்காக வர்த்தகத் திணைக்களத்தின் பணிப்பாளரின் முன் ஒப்பு தல் அவசியம் என அறிவிக்கப்பட்டது.

(ii) கராம்பு இறக்குமதி செய்வதற்கான கொடுகடன் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என அதிகாரம் பெற்ற வணிகர்களுக்கு அறி விக்கப்பட்டது.

7. வதிவோர் நடைமுறைக் கணக்குகள்

இலங்கையில் உள்ள தனியார் நிறுவனங்கள் அல்லது அரசாங்கத்துடன் ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களால் அல்லது வெளிநாட்டு கூட்டு நிலையங்

களால் மேற்கொள்ளப்பட்டுள்ள வதிவோர் நடைமுறைக் கணக்குகளிலான பற்றுக்கள் உள்ளூர் பகிர்ந்தளிப்புக்களுக்காகவும் வெளிநாட்டில் உள்ள தங்கியிருப்போரின் பராமரிப்புக்காகவும் மட்டும் செய்யப்படலாம்.

8. உள்முக பணவனுப்பல்கள்

கீழ் வருபவை தொடர்பாக பெறப்படும் 50,000 ஐ. அ. டொலர்களுக்கும் அதற்கு மேலுமான எல்லா உள்முக பணவனுப்பல்களுக்கும் இலங்கை ரூபாவுக்கு மாற்றுவதற்கான செலாவணிக் கட்டுப்பாட்டு ஒப்புதல்கள் பெறவேண்டிய தேவை தளர்த்தப்பட்டுள்ளது.

(அ.) ஏற்றுமதிகளுக்கான முன் கொடுப்பனவுகளும், அல்லது கொடுப்பனவுகளும்.

(ஆ ) கப்பற் கலங்களினது பகிர்ந்தளிப்புக்களுக்கான கடல் கடந்த முகவர்களிடமிருந்தான கொடுப்பனவுகள்.

(இ.) கப்பல்களுக்கும், வானூர்திகளுக்கும் எரிபொருள் செலவுகளுக்காக கடல் கடந்த முகவர்களிடமிருந்தான கொடுப்பனவுகள்.

(ஈ.) வெளிநாடுகளிலிருந்தான இலங்கை கப்பல்கள் பெற்ற கப்பற் கட்டணக் கொடுப்பனவுகள்.

(உ.) பொது விற்பனை முகவர்களினாலும், இலங்கையில் தொழிற்படும் வெளிநாட்டு வானூர்தி நிறுவனங்களின் உள்நாட்டுக் கிளைகளினாலும் பெறப்பட்ட பணவனுப்பல்கள்.

(ஊ.) ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு சிறுவர் நிகழ்ச்சித் திட்டம் ஐக்கிய நாடுகள் பன்னாட்டு சிறுவர் அத்தியாவசிய நிதியம், உணவு வேளாண்மை அமைப்பு, உலக உடல் நல அமைப்பு, கொழும்பு திட்ட பணியகம் ஊடாக ஐ. நாட்டு முகவர்களினால் பெறப்பட்ட நிதியங்கள்.

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் நியதிகளின்படி அரசின் சார்பில் பொதுப் படுகடனை மத்திய வங்கி தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது. முக்கிய தொழிற்பாடுகள் ரூபாக் கடன்களை மிதக்கவிடல் வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்களை பதிவு செய்தல், உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துதல், வட்டி, கடப்பாட்டுக் கட்டணங்களின் கொடுப்பனவு ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. 1983 ஆம் ஆண்டுக் காலத்தில் கடன்கள் 1982ஆம் ஆண்டின் (சிறப்பு விதிகள்). விதி எண் 40 இனதும் 1983இன் ஒதுக்கு விதி எண் 15 இனதும் நியதிகளில் ரூ. 81,880 இலட்சம் தொகையினைக் கொண்ட ரூபாக் கடன்கள் மிதக்கவிடப்பட்டன. இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களின் வழங்கல் வெளிநிற்கும் உண்டியல்களின் தொகையை ரூ. 800 இலட்சத்தால் அதிகரித்தன. இவ்வாண்டில் இணைந்த முதலீட்டு நிதியம், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள், வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள், வெளிநாட்டுப் படுகடன் ஆகியவற்றைப் பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் முகாமைப்படுத்துவதும் தொடர்ந்திருந்தது. 1984 நிதியாண்டிலிருந்து ரூபாக் கடன்களை மீட்பதன் பொருட்டு உதவு தொகையின் கடன் கரைப்பு நிதியங்களுக்கு செல்லவிடாது தடுக்கும் ஏற்பாடுகளின் பொருட்டு பதிவு செய்யப்பட்ட இருப்புக்கள், பிணைகள்

அட்டவணையானது (அத்தியாயம் 420) 1983 விதி இலக்கம் 51 இனுல் திருத்தம் செய்யப்பட்டது. 1983 இல் மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 65,930 இலட்சங்களாக இருந்ததுடன் கடன் கரைப்பு நிதியங்களிற்கான உதவு தொகைகளை உள்ளடக்கி கடன்களின் மொத்த மீள் செலுத்துகைகள் ரூ. 48,710 இலட்சங்களாக விளங்கின.

அத்துடன் பொதுப் படுகடன் கண்காணிப்பாளர் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை அரச ஈட்டு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் சார்பில் தொகுதிக் கடன்களையும் மிதக்கவிட்டார்.

### ஊழியர் சேம நிதியம்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது உதவு தொகைகளைப் பெறுவதற்காக பொறுப்பினையும் மேலதிகக் கட்டணங்கள், முதலீடு செய்யப்படும் நிதியம் பணத்திலிருந்தான வருமானம், பதிவு செய்யப்பட்ட ஊழியர்களது முறையான கணக்குகளைக் கையாளுதல் இந்நிதியத்தின் தனிப்பட்ட உறுப்பினர்கள், ஊழியர் சேம நிதியச் சட்ட விதியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி உறுப்பினர்களின் நன்மைகளை மீளச் செலுத்துதல் போன்றவற்றிற்குப் பொறுப்பாகவுள்ளது. இந்த நடவடிக்கைகள் வங்கியின் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினுல் மேற்கொள்ளப்படுவதுடன், நிருவாக விடயங்களை மேற்கொள்வதும், இந்த விதியின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தலை மேற்கொள்வதுமான தொழிற் திணைக்களத்தின் ஊழியர் சேம நிதிய பிரிவுடன் நெருங்கிய இணைத் தொழிற்பாட்டினைக் கொண்டுள்ளது. 1983ஆம் ஆண்டுக் காலத்தில் அதன் நடவடிக்கைகள் பற்றி சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

#### உதவு தொகைகள்

1983 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இந் நிதியத்தினுல் பெறப்பட்ட உதவு தொகைகள் 1982 ஆம் ஆண்டின் ரூ. 10,796 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 12,017 இலட்சங்களாக விளங்கியது. இது முன்னைய ஆண்டுக் காலத்தில் பெறப்பட்ட உதவு தொகை மட்டத்தினைவிட 11 சத வீதம் அதிகரித்துள்ளமையைப் பிரதிபலிக்கின்றது.

#### ஊழியர்களின் நிலுவைகள்

மீளாய்வுக்குரிய ஆண்டிற்கான வட்டிகள் வழங்கப்படுவதற்கு முன்னர் உறுப்பினர்களின் நிலுவைகள் 1983 திசெம்பர் 31 இன்படி ரூ. 83,419 இலட்சங்களாக விளங்கி 1982ஆம் ஆண்டுக்கான மட்டத்தைவிட ரூ.15,016 இலட்சம் அல்லது 22 சத வீதத்தினுல் அதிகரித்தது.

#### முதலீடுகள்

மீளாய்விற்குரிய ஆண்டில் இந்நிதியம் 1982 ஆம் ஆண்டின் ரூ. 14,777 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 23,890 இலட்சங்களை அரச பிணைகளிலும், திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்து 62 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. மீளாய்வுக்குரிய ஆண்டின் மொத்த முதலீடானது முதிர்ச்சியடைந்த முன்னைய முதலீடுகள், திறைசேரி உண்டியல்கள் ஆகியவற்றின் ரூ. 6,766 இலட்சம்கொண்ட

தொகையினை உள்ளடக்கியிருந்தது. 1983 ஆம் ஆண்டுக் காலத்தில் இலங்கை அரசினல் வழங்கப்பட்ட மொத்தப் பிணைகளில் 26 சதவீதத்தைப் பிரதிபலிக்கும் ரூ. 23,450 இலட்சங்கள் அரச பிணைகளில் மாத்திரம் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையாகும். 1983 திசெம்பர் 31இன்படி நிதியத்தில் முதலீடு செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 89,567 இலட்சங்களாக விளங்கி, 1982 மட்டத்தினைவிட ரூ. 17,124 இலட்சங்கள் அதிகமாயிருந்தது.

**முதலீட்டிலிருந்தான வருமானம்**

1983 இல் இந்த நிதியத்தின் முதலீடுகளில் இருந்தான வருமானம் 1982இன் ரூ. 6,585 இலட்சங்களுக்கெதிராக ரூ. 9,234 இலட்சங்களாக விளங்கி 40 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மீளாய்வுக்குரிய ஆண்டில் நிதியத்தினுல் பெறப்பட்ட அதிகரித்த அளவு உதவு தொகைகளின் முதலீடு, கடந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாயின் மீள் முதலீடு என்பன இவ்வதிகரிப்பின் முக்கிய காரணிகளாகும்.

**மீளளிப்புக்கள்**

1983 ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு ஊழியர் சேம நிதியத்தின் மீளளிப்புக்கள் மூலம் வழங்கப்பட்ட மொத்தத் தொகை 1982 ஆம் ஆண்டின் ரூ. 3,726 இலட்சங்களுக்கெதிராக ரூ. 3,836 இலட்சங்களாக விளங்கியது. இது 3 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மீளாய்வுக்கான ஆண்டுக் காலத்தில் 75,049 மீளளிப்புக் கோரல்கள் பெறப்பட்டதுடன் அதில் 14,943 குடிபெயர்ந்து செல்லும் இந்தியக் குடிகளினுடையதாயும் 31,085 வைத்திய அத்தாட்சியின் கீழான கோரல்களையும் உள்ளடக்கும். இவ்வாண்டுக் காலத்தில் மீளளிப்புச் செய்யப்பட்ட கோரல்களின் எண்ணிக்கை மொத்தம் 55,082 ஆகும்.

**உறுப்பினர் நிலுவைகளின் மீதான வட்டி**

ஊழியர் சேமநிதியானது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நிதியத்தின் பண முதலீடுகளிலிருந்தான வருமானத்திலிருந்து உறுப்பினர்களின் நிலுவைகளுக்கு வட்டி கொடுப்பனவு செய்தல் வேண்டும். உறுப்பினர்களின் நிலுவைகளின் மீது வழங்கப்படவேண்டிய வட்டிவீதம் 1982இன் 9.5 சதவீதத்திற் கெதிராக 1983ஆம் ஆண்டில் ஆண்டொன்றுக்கு 10 சதவீதமாக உயர்த்தப்பட்டது. ஆண்டின் இறுதியில் உறுப்பினர் வரவில் வெளிநிற்கும் நிலுவைகளின் மீது வட்டியும் அதன் பின்னர் கூட்டு மொத்தத்தில் வட்டி ஒன்றும் திரட்டப்படுகின்றது. இதனைவிட ஆண்டின் இறுதியில் உறுப்பினர் ஒருவரின் வரவில் வெளிநிற்கும் நிலுவையின் பேரில் அந்நிலுவைகளில் ஏதேனும் பகுதி (இது நடைமுறை ஆண்டின் உதவு தொகையினைக் குறிக்கும்) உறுப்பினரின் வரவிற்கு நிதியினுல் பெறப்பட்ட நாளைக் கருத்திற் கொள்ளாது. முழு ஆண்டிற்கும் வட்டிகொடுக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, திசெம்பர் மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகைகள் அவ்வாண்டின் சனவரி மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகைகளைப்போல முழு ஆண்டிற்கான வட்டியைப் பெறுகின்றது. ஆகவே வட்டியின் பயனுள்ள வீதம் ஏறத்தாழ 11.2 சதவீதமாகும்.

தற்போது கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி நிதியத் தொழிற்பாடுகளின் ஒப்பீட்டு அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.11

**ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1982 — 1983**

(ரூபாய் '000)

| | 1982 | 1983 |
|---|---|---|
| 1. பெறப்பட்ட உதவுதொகைகள் (ரூபாய்களில்) ... | 1,079,584(அ) | 1,201,670(அ) |
| 2. முதலீடுகள் (ரூபாய்களில்) ... | 1,477,718(ஆ) | 2,389,003(ஆ) |
| 3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூபாய்களில்) | 658,488 | 923,397 |
| 4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூபாய்களில்) ... | 372,643 | 383,644 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 69 | 55 |
| 6. வட்டி வீதம் (%) ... | 10.0 | 12.0 |
| 7. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி (ரூபாய்களில்) ... | 684.034 | 1,001,027 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக
(ஆ) அரச பிணைகளில் மீள்முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சித் தொகைகளையும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

## ஆளணி

ஆளுநர் முனைவர் டபிள்யூ. இராசபுத்ர 1983ஆம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் மகாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்.

அ. இந்தோனேசியாவில் பாலியில் (சனவரி 25-30) நடைபெற்ற தென் கிழக்கு ஆசிய மத்திய வங்கி ஆளுநர்களின் மகாநாடு.

ஆ. வாஷிங்டனில் (ஏப்பிரல் 20-மே7) நடைபெற்ற பன்னாட்டுநாணய நிதிய உலக வங்கி அபிவிருத்திக் குழுக்கூட்டம் குழு 24இன் கூட்டங்கள்.

இ. இங்கிலாந்து வங்கியில் இடம்பெற்ற பொதுநலவமைப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் மகாநாடு, பாரிசில் உதவி வழங்கும் குழுக்களின் கூட்டம், நைசில் வங்கியாளர் கருத்தரங்கு (யூன் 8-19)

ஈ. வாஷிங்டனில், பன்னாட்டு நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் ஆண்டுப் பொதுக்கூட்டங்கள் குழு 24இன் கூட்டம் (செத்தெம்பர் 18-ஒத்தோபர் 12)

உ. நேபாளத்தில் காத்மண்டுவில், நடைபெற்ற (நவம்பர் 27-திசெம்பர் 3) தென்கிழக்காசியா, நியூசிலாந்து, அவுத்திரேலியா ஆகிய நாடுகளின் ஆளுநர் சபையின் பதினைந்தாவது மகாநாடு.

1983 சனவரி மாதத்தில் ஆளுநர் வெளிநாட்டிலிருந்த காலத்தில் மூத்த துணை ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணாதிலக வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

1983 ஏப்பிரல், யூன், செத்தெம்பர், ஒத்தோபர், நவெம்பர், திசெம்பர் ஆகிய மாதங்களில், ஆளுநர் வெளிநாட்டில் இருந்த காலப்பகுதிகளில் துணை ஆளுநர் திரு. டி. எல். கன்னங்கர மூத்த துணை ஆளுநராகப் பதவியிலமர்த்தப்பட்டு வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் வெளிநாட்டிலிருந்த காலப்பகுதியில், திறைசேரியின் துணைச் செயலாளரான திரு. சி. பி. சண்முகம் நாணயச்சபையின் மாற்று அலுவல்சார் உறுப்பினராகச் செயற்பட்டார்.

**நியமனங்கள்**

ஓமான் மத்திய வங்கியில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்ட முனைவர் கே. எஸ். ஈ. ஜயதிலக 1983 செத்தெம்பர் 19 இலிருந்து மத்திய வங்கிப் பணிக்கு மீண்டதுடன் நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையேற்றார்.

சம்பியா மத்திய வங்கியில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்ட திரு. யூ. ஏ. த சில்வா 1983யூன் 6 இலிருந்துமத்தியவங்கிப் பணிக்கு மீண்டதுடன், முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

ஊழியர்சேம நிதியத்திணைக்களத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. சி. செல்வசிரஞ்சீவி முறையே 1983 ஏப்பிரல் 1இலும் 1983 யூன் 11 இலும் பதில் மேலதிக முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளராகவும் முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

திரு. சி. டி. விமலசூரியா 1983 செத்தெம்பர் 9 இலிருந்து நாணயத்திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

**ஓய்வு பெற்றோர்**

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. எச். பிரேமரத்ன 1983 ஓகத்து 16 இலிருந்து வங்கிப் பணியிருந்து ஓய்வுபெற்றார்.

இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிக்கு விடுவிக்கப்பட்ட திரு. வி. கே. விக்ரமசிங்க 1983 பெப்புருவரி 21 இலிருந்து இலங்கை மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளர் திரு. எம். எச். சௌஜா 1983 யூன் 11 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

நாணயத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் திரு. எஸ். பி. விக்கிரமரத்ன 1983 செத்தெம்பர் 9 இலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

விடுவிப்பில் உள்ள அலுவலர்கள் (1983 திசெம்பர் 31ஆம் நாளிலுள்ளவாறு) பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையின் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றில் கடமையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டார்கள்.

நிறைவேற்றுப் பணியாளர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

முனைவர் எஸ். ரி. ஜி. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதித்திட்டமிடல் அமைச்சுக்கு

திரு. எஸ். இராசலிங்கம் திறைசேரியில் பொருளாதார அலுவலர்கள் பிரிவின் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சுக்கு

திரு. என். ஏ. தர்மபந்து சொலமன் தீவுகளில் நாணய மேலாண்மைச்சபையில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

முனைவர் டபிள்யூ. எட்டியாராச்சி, பூட்டான் அரச நாணய மேலாண்மைச் சபையில், கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

திரு. ஈ. பாலசிங்கம் சியரலியோன் வங்கியில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

முனைவர் எம். யூ. ஏ. தென்னக்கோன் இலங்கை மகாவலி அதிகாரசபைக்கு மதிப்பீட்டு ஆய்வு மதியுரையாளராக கடமையாற்றுவதற்கு

திரு. ஏ. ஏ. டி. ஜஸ்ரின் கைத்தொழில் அறிவியல் அலுவல் அமைச்சின் செயலாளராகப் பணிபுரிவதற்கு கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சிற்கு

முனைவர் ஏ. சி. ரந்தெனி, திருவாளர்கள் எம்.பி. திசநாயக்க, ஜி. ஏ. வீ.பொன்சேகா, முனைவர் ஐ. குமாரசுவாமி ஆகியோர் நிதிதிட்டமிடல் அமைச்சுக்கு.